



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ–பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் – 7 இதழ் – 2, மார்ச் – ஏப்ரல் 2021

R5214

## HATED WITHOUT A CAUSE
## காரணமின்றி வெறுக்கப்பட்டவர்

*ஆதியாகமம் – 37*

*"அன்புக்கு பொறாமை இல்லை." -1கொரிந்தியர் 13:4*

யோசேப்பு மற்றும் அவனது சகோதரர்களின் வரலாறு அதன் எளிமை மற்றும் அழகில், பல்வேறு தோற்றங்களில் மிகுந்த ஆர்வமுடையதாகவும் போதனைக்குரியதாகவும் இருக்கிறது. மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் ஒரு குழந்தைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் குழந்தைகளிடையே பொறாமையின் ஆவியை வளர்க்கும் பெற்றோரின் ஞானமின்மையைப் பற்றிய ஒரு பாடமாக இருக்கிறது. இன்னொரு பாடம், யோசேப்பு தனது கனவுகளை தனது சகோதரர்களிடம் கூறியது போல, இரக்கமற்ற காதுகளிடம் நமது கனவுகளை கூறுகிற ஞானமின்மையைப் பற்றியதாகும். ஒரு கனவில் யோசேப்பின் கோதுமை அரிக்கட்டை மற்ற பதினொருவரின் அரிக்கட்டுகள் வணங்கி நிற்கின்றன. மற்றொரு கனவில் சூரியன், சந்திரன் மற்றும் பதினொன்று நட்சத்திரங்களும் யோசேப்பை வணங்கின.

யோசேப்பு இந்த கனவுகளை கண்டதினால் அவனை குற்றப்படுத்த முடியாது. பெரும்பாலான கனவுகள் அஜீரணத்தினால் வருகிறதாக இருக்கும். ஆனால் இது அப்படியல்லாமல் கர்த்தரிடத்திலிருந்து வந்தது. இந்த கனவை யோசேப்பு கபடமில்லாமல் தனது சகோதரர்களிடத்தில் கூறியதைக் கூட நாம் குற்றம் சொல்ல முடியாது. இது தெளிவாக கர்த்தர் செய்ய வேண்டும் என்று நினைத்த காரியமாக இருந்தது. கர்த்தர் யோசேப்பின் சகோதரர்களின் பொறாமையையும், அது அவர்கள் மனதில் எப்படி வளர்க்கப்படும் என்பதையும் முன்னமேயே அறிந்தவராயிருந்தார். அதற்கான சந்தர்ப்பத்தை அவர் கொடுத்தார். ஏனெனில் யோசேப்பின் பின் வருகிற அனுபவங்களை அவர் முன்னரே திட்டம் செய்திருந்தார். அவனது சகோதரர்களின் பொறாமை அந்த திட்டம் நிறைவேற உதவியது.

ஒருவரது சுய உண்மையை பிறருக்கு அறியப்பண்ணுவது அவசியமற்றது என்பது ஞானத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஏனெனில் அது எதிர்ப்பை எழும்பப்பண்ணும் என்ற பாடத்தை பொதுவாக நாம் கற்றுக்கொள்கிறோம். இந்த கருத்தை ஆதரிக்கும் விதமாக இயேசு கூறுகிறதாவது : "உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்." தேவனுடைய திட்டம் மற்றும் கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்கடுத்த மிக ஆழந்த சத்தியங்களை யாருக்கென்று உத்தேசித்திருக்கிறாரோ அதாவது சாந்த குணமுள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் சொல்லாதிருப்பது நல்லது.

### யோசேப்பு மேசியாவுக்கு முன்னடையாளம்

இதற்கு முன் நாம் சொன்னதோடு கூட இன்றைய வேதாகம பாடத்தில் முக்கியமான அம்சம் என்னவென்றால் யோசேப்பை மேசியாவாகிய கிறிஸ்துவை தீர்க்கதரிசன சித்திரம் அல்லது ஒரு நிழலாக அடையாளம் காணுதல் ஆகும். யோசேப்பின் சகோதரர்களின் பொறாமை அவனை கொலை செய்ய சதி செய்து, பின்னர் அவனை எகிப்தில் அடிமையாயிருக்க விற்றபொழுது, அவன் தனது சகோதரர்களிடம் தயவு உடையவனாகவும் இரக்கத்தை எடுத்துச்செல்கிறவனாகவும் இருந்தான். அவனது சகோதரர்கள் காரணமில்லாமல் அவனை வெறுத்தார்கள். அவன் நல்லவனாகவும் தனது தந்தைக்கு அன்புள்ளவனாகவும் இருந்ததாலும் தேவன் கனவு மூலமாக அவன் உயர்த்தப்பட போவதை காண்பித்ததாலும் மட்டுமே அவனை வெறுத்தார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள் இப்படியாக சொல்லியிருக்க வேண்டும்: "நாம் இவ்வளவாய் உயர்ந்த ஒரு சகோதரனை பெற்றிருப்பதால் நாம் களி கூருவோமாக. ஒரு உயர்ந்த நிலைக்கு அவன் உயர்த்தப்படுவது தேவனுடைய சித்தமாக இருந்தால் நாம் களிகூருவோமாக. தேவன் நமது முற்பிதா ஆபிரகாம் மற்றும் ஈசாக்கு மற்றும் நமது பிதா யாக்கோபுக்கு செய்திருந்த வாக்குத்தத்தம் இப்படியாக ஒரு நிறைவேறுதலைப் பெறும். தேவன் எது உயர்ந்த வழி என்று நினைக்கிறாரோ அந்த வழியில் அவரது ஆசீர்வாதங்கள் வருவதாக. அவன் தேவனுக்கு பிரியமானவனாகவும் நமது பிதா யாக்கோபுக்கு பிரியமானவனாகவும் இருப்பதால் நமது சகோதரனோடு நாம் களிகூருவோமாக. நாம் அவனது குணலட்சணத்தை பின்பற்ற நாம் மென்மேலும் நாடுவோமாக." ஆனால் அவர்கள் கொடூரமாக இருக்கும் அளவுக்கு பொறாமை கொண்டு, முதலில் அவனை கொல்ல தீர்மானித்து, பிறகு ஒரு மாற்றாக அவனை அடிமையாக விற்க தீர்மானித்தார்கள்.

### " முகாந்தரமில்லாமல் அவனை பகைத்தார்கள் "

ஆனால் தேவன் யோசேப்புக்கு தொடர்ந்து கிருபை செய்தார். ஒரு அடிமையாக அவனை ஆசீர்வதித்து, அநேக பாடுகள் மூலமாக, கடைசியில் பார்வோனுக்கு அடுத்தபடியாக அதிகாரமும் வல்லமையும் உடையவனாக எகிப்தின் அரசாட்சியில் உயர்த்தினார். பிறகு நாட்டின் பஞ்சம் யோசேப்பின் சகோதரர்களை எகிப்திற்கு கோதுமை வாங்க விரட்டியது. இப்படியாக, பதினொருவரின் அரிக்கட்டுகள் யோசேப்பின் அரிக்கட்டை வணங்கி நின்றது மூலமாக விளக்கப்பட்ட, அவனது சகோதரர்கள் அவனை குனிந்து வணங்குவார்கள் என்ற அவனது கனவு நிறைவேறியது.

பிற்பாடு, அவனது தந்தையும் முழு குடும்பமும் எகிப்துக்கு வந்து கோசேன் நாட்டில் குடியிருக்கும் போது, அவர்கள் அனைவரும் எகிப்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக அவனை வணங்கினார்கள். இப்படியாக அவனது இரண்டாவது கனவும் நிறைவேறியது. ஆனால் இந்த அனுபவங்கள் அனைத்தும் இருண்ட காலத்துக்குரியவைகளாயிருந்தன. யோசேப்பு சிங்காசனத்திற்கு உயர்த்தப்படும் காலம் வரை அவனது குடும்பத்தில் மற்றவர்களைக் காட்டிலும் தேவன் அவனை குறைவாக நேசித்தார் என்று அவர்கள அனைவரும் நினைத்தார்கள். பிறகு எல்லாமே மாறிப்போனது.

**" இவைகள் ஞான அர்த்தமுடையவைகள் "**

இவையனைத்தின் ஞான அர்த்தத்தை இயேசுவுக்கு பொருத்திப் பார்த்தால், முகாந்தரம் இன்றி அவரும் கூட பகைக்கப்பட்டார். சங்கீதம் 69:4 ல் நாம் வாசிப்பதாவது: "நிமித்தமில்லாமல் என்னை பகைக்கிறவர்கள் என் தலை மயிரிலும் அதிகமாக இருக்கிறார்கள்." இயேசு இந்த வசனத்தை குறிப்பிட்டு, தமக்கு அதை ஒப்பிட்டு கூறுகிறதாவது: "முகாந்தரம் இல்லாமல் என்னை பகைத்தார்கள்." (யோவான் 15:25) இயேசுவை சிலுவையிலறைந்த யூதர்கள் அவரது சகோதரராயிருந்தார்கள். ஆனால் மரணத்திற்கான முகாந்தரம் அவரிடம் காணப்படவில்லை.

அவர்கள் அவரை சிலுவையில் அறைய வேண்டும் என்று சொன்னது பொறாமையினால் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். ஏனெனில் அவரது கிரியைகள் நல்லதாக இருந்தன. அவர்களது கிரியைகள் தீமையானதாக இருந்தன. ஏனெனில் அவர்களைக் காட்டிலும் அவர் கர்த்தருடைய வழியை மிகவும் சரியாகப் போதித்தார். ஏனெனில் அவர்களும் மற்ற அனைவரும் அவர் மேசியா என்று அறிந்து கொள்ளக்கூடிய காலம் வரும் என்றும் அவர் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வருகிறதை கண்டு முழங்கால்கள் யாவும் முடங்கும் என்றும் அறிவித்தார்.

யோசேப்பை, ஆபத்து, துரோகம் மற்றும் அவமானம் ஆகியவை எகிப்தின் அரியாசனத்தில் கனத்திற்கும் மகிமைக்குமான வழியை தயார்படுத்தினது போல இயேசுவுக்கும் ஆனது. அவரது சோதனை அனுபவங்கள் அவர் தேவனுக்கு விசுவாசமாய் இருப்பதை நிரூபித்து, அவரை தேவனுடைய வலது பாரிசத்துக்கு உயர்த்தப்படுவதற்கு வழி நடத்தியது. இயேசு கிறிஸ்துவைப் பற்றி பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறதாவது: "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோ-த்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைக் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்." (எபிரேயர் 12:2) மேலும் அவர் கூறுவதாவது: "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே." (2 கொரிந்தியர் 8:9) யோசேப்பின் அனுபவம், அவரது அனைத்து அவமானங்களும் பார்வோன் ராஜாவினால் கனப்படுத்தப்படுவதற்கும் வழியை ஆயத்தப்படுத்துவதற்கும் உதவியது. மறுபடியும் நாம் இயேசுவைப் பற்றி வாசிப்பதாவது: "அவர் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கெண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணரானார்." (எபிரேயர் 5:9)

**" நாம் அவரோடு பாடுபட்டால் "**

தேவனுடைய மாபெரும் திட்டத்தில் இயேசு மாத்திரம் உலகத்தின் மேசியாவாக சிங்காசனத்திற்கு உயர்த்தப்படாமல் அவரோடு கூட ஒரு சகோதரர் கூட்டம் அதே கனம், மகிமை, சாகாமை ஆகியவற்றில் உயர்த்தப்படுவார்கள் என்று வேத வாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன. இந்த சகோதரர்கள் தேவனுடைய மாபெரும் குறிக்கோளின்படி, அவர்களது மூத்த சகோதரர் இயேசுவின் அதே போன்ற அனுபவங்களின் வழியாக கடந்து செல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களது அனுபவங்கள் யோசேப்பின் அனுபவங்களிலும் விளக்கிக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் அவர்களது மூத்த சகோதரருக்கு சமமானவர்கள் அல்ல. அவர் அவர்களது தலையானவராகவும், முதன்மையானவராகவும், இரட்சிப்பின் அதிபதியாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகையால் நாம் மறுபடியும் வாசிப்பதாவது: தேவன், "அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப் -படுத்துகிறது அவருக்கு ஏற்றதாக இருந்தது." (எபிரேயர் 2:10)

இது போலவே, இந்த மாபெரும் அதிபதியின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட குமாரர்களின் கூட்டத்தார் அனைவரும் பாடுகள் மூலமாக பூரணப்படுத்தப்பட வேண்டும்.

கடந்த பத்தொன்பது (தற்போது இருபது) நூற்றாண்டு கால சபையில் கடுமையான அனுபவங்கள் இதை விவரிக்க வில்லையா? அப்போஸ்தலர் யோவான் அறிவிக்கிறதாவது:. "அவர் இருந்த பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்." மறுபடியும் அவர் கூறுகிறதாவது: "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை." (1 யோவான் 4:17; 3:1) யோசேப்பின் சகோதரர்கள், தங்களது சகோதரன் தங்களையும் எகிப்தியரையும் பஞ்சத்திலிருந்து காப்பவன் என்பதை அறியாதிருந்ததைப்போல, இந்த உலகமும் கூட மேசியாவின் மூலம் மட்டுமே யாரும் நித்திய ஜீவனை பெற முடியும் என்பதை உணரவில்லை.

இந்த இணைப்பில் தான் தன்னை முகாந்தரம் இல்லாமல் வெறுத்தார்கள் என்று குறிப்பிட்டு இதே போல தம்முடைய சீ-ர்களும் அநீதியாக வெறுக்கப்படுவார்கள் என்பதை எதிர்பார்க்க வேண்டும் என்று முன்னெச்சரித்தார். நாம் வாசிக்கிறதாவது: "உலகம் உங்களை பகைத்தால், அது உங்களை பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாரயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களை பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானனிலும் பெரியவனல்ல என்று நான் உங்களுக்கு சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னை துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள். அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தம் இவைகளையெல்லாம் உங்களுக்கு செய்வார்கள்......... முகாந்தரமில்லாமல் என்னை பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியங்கள் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று." (யோவான் 15: 18:25)

நமது கர்த்தர் எடுத்து பேசிய முழு பகுதியையும் நாங்கள் இங்கே கொடுக்கிறோம். "நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாக இருக்கிறார்கள். .........சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரே உமக்காக காத்திருக்கிறவர்கள் என்னிமித்தம் வெட்கப்பட்டுப்

போகாதிருப்பார்களாக; இஸ்ரயேலின் தேவனே, உம்மைத் தேடுகிறவர்கள் என்னிமித்தம் நாணமடையாதிருப்பார்களாக. உமது நிமித்தம் நிந்தையைச் சகித்தேன்; இலச்சை என் முகத்தை மூடிற்று. என் சகோதரருக்கு வேற்று மனு-னும் என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன். உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என் மேல் விழுந்தது. நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது. நான் மிகவும் வேதனைப்படுகிறேன்; எனக்காக பரிதபிக்கிறவன் உண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றுகிறவர்களுக்கும் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன். என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்கு காடியை கொடுத்தார்கள்." (சங்கீதம் 69 : 4-9, 20,21)

## உண்மைகளின் தத்துவம்

இயேசுவும் அவரது அனைத்து சீ-ர்களும் தெய்வீக நோக்கத்திற்கு இசைவாக அவமானங்களையும் நிந்தைகளையும் அனுபவித்தார்கள் என்ற உண்மைகளை நாம் கவனித்திருக்கிறோம். இயேசுவும் அவரது ஆதிகால சபையும் தங்களது மாம்சீக பிரகாரமான சகோதரர்களாகிய யூதர்களினால் துன்பங்களை அனுபவித்தார்கள் என்று நாம் தெரிந்து கொள்கிறோம். அதிலிருந்து சுவிசே-யுகம் முழுவதும் சபை, இயேசுவின் சகோதரர்கள் மற்றும் விசுவாச வீட்டார் அனைவரும் கூட தங்கள் சகோதரர் மூலமாகவே துன்பங்களை அனுபவித்தனர். இந்த சகோதரர்கள் யூதர்கள் அல்ல, ஆனால் கிறிஸ்தவர்கள். இயேசுவின் நாளில் யூத மதத்தினர் தங்களது நீதியான சகோதரர்களை துன்பப்படுத்தினது போல, ஆதியிலிருந்து பேர் கிறிஸ்தவர்கள் கர்த்தரின் உண்மையுள்ள சீ-ர்களின் பிரதானமான துன்பப்படுத்துகிறவர்களாக இருந்திருக்கிறார்கள்.

இந்த துன்பம் ஒவ்வொரு சபைப்பிரிவிலும் உள்ள விசுவாசமுள்ள ஆத்துமாவின் மேல் வந்திருக்கிறது. இந்த துன்பங்கள் கிட்டதட்ட ஒவ்வொரு சபையின் அவிசுவாசமுள்ள ஆத்துமாவிடமிருந்து வந்திருக்கிறது. பிரிஸ்பட்டேரியன், கவனென்டர்ஸ், எபிஸ்கோபல் சபையினர், ரோமன் கத்தோலிக்கு, மெதடிஸ்ட் மற்றும் பேப்டிஸ்ட் சபையினர் அனைவரும் அவர்களது குருடாயிருக்கிற சகோதரர்கள் மூலமாக துன்பத்தை அடைந்தனர். அந்த துன்பப்படுத்துகிற வேலையை குருடானவர்கள் தங்களிடையே பகிர்ந்து கொண்டனர். ஒவ்வொரு காரியத்திலும் இந்த துன்பப்படுத்துகிற வேலை தேவனுக்கு மகிமையாக செய்யப்பட்டதாகக் கருதப்பட்டது. இப்படியாக கர்த்தர் தீர்க்கதரிசி மூலமாக இதை வெளிப்படுத்துகிறார். "என் நாமத்தினிமித்தம் உங்களை பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்கு சந்தோ-ம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்." (ஏசாயா 66:5)

பொதுவாக உலகமானது, யூதர்களையும் உள்ளடக்கி, இயேசுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தது ஒரு பெரிய தவறு என்பதை உணர்கிறார்கள். இதே போல இயேசுவின் விசுவாசமுள்ள சீ-ர்களுக்கு எதிராக துன்பம் இழைக்கப்பட்டது என்பதையும் உணர்கிறார்கள். இன்னும் அதே குருட்டுத்தனம், அதே பொறாமை குணம் நமது காலத்திலும் துன்பப்படுத்த வழிநடத்துகிறது.

பெரும்பாலானோர் தாங்கள் தேவனைப் பற்றியும் வேதத்தைப் பற்றியும் தெளிவாக தெரியாது என்பதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் வெளிச்சத்தின் தேவனிடம் ஜெபித்து பாடுகிறார்கள். "வெளிச்சத்திலே எங்களை வழி நடத்தும், எங்களை சுற்றியுள்ள இருளின் மத்தியிலிருந்து." எனினும் ஏதாவது வெளிச்சம் தெரிந்தால் ஏதாவது அன்பான அல்லது மென்மையான குரலைக் கேட்டால், புதிய நாளின் விடியலை நோக்கி நடத்தினால், தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தின் தெளிவையும், தேவனுடைய இரக்கத்தின் நீளம் மற்றும் அகலத்தையும் குறிப்பிட்டால், உடனே அவர்களது பாட்டு நின்று விடும், அவர்களது பரிகாசம் மற்றும் அவதூறு கற்களும் உருட்டப்படும். ஏன்? தற்செயலாக எந்த மாறுதலும் நடைபெறாது; இன்னும் அதிக வெளிச்சம் பெறலாகாது; தெய்வீக வாக்குத்தத்தம் நிறைவேறாது; புது விடியல் அறிவிக்கப்படாது.

ஆனால் இந்த சரித்திர உண்மைகளின் தத்துவம் என்ன? கிறிஸ்து பாடுபட வேண்டும் என்றும், அவரது அடிச்சுவட்டில் நடக்கிற அனைவரும் நிந்தைகளையும், இழிவுகளையும், அவமானங்களையும் அவருடன் அனுபவிக்க வேண்டும் என்றும் தேவன் ஏன் அனுமதித்தார், நியமித்தார்? இயேசுவின் வி-யத்தில் அவரது அன்பையும் விசுவாசத்தையும் சோதிப்பதற்கும், இந்த கடுமையான அனுபவங்களை பிதாவானவர் பயன்படுத்தினார். மேலும் அவரது கீழ்ப்படிதலை தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் விளங்கப்பண்ணினார். மாபெரும் மகிமையையும் கனத்தையும அவருக்கு அளிக்கும் நோக்கத்துடன், லோகாஸ் பின்னர் இயேசுவின் தகுதியை பிதாவானவர் பார்த்தபடி மற்ற அனைவரும் பார்க்கும்படி செய்தார்.

இயேசு மரணபரியந்தம் உண்மையுள்ளவராய் இருந்ததினால் அவர் மிகவும் உயர்த்தப்பட்டதை அங்கீகரிக்கும் வண்ணமாக வானத்தின் சேனைகள் அடையாள சித்திரமாக கூறுகிறதாவது: "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறார்." (வெளிப்படுத்துதல் 5:12) லோகாஸாகிய இயேசுவின் தகுதியை வெளிப்படுத்துதல் அவசியமானதாக அல்லது சரியானதாக இருக்கும் போது, விழுந்து போன இனத்திலிருந்து கூட்டிச்சேர்க்கப்பட்டு தெரிந்தெடுக்கப்பட்ட சபையானது, தேவனிடத்தில் தங்களது மரண பரியந்தமுமான விசுவாசத்தை நிரூபிப்பதற்கு அவசியமாயிருந்தது. எனினும் அங்கே ஒரு வித்தியாசம் இருக்கிறது.

ஆண்டவருடைய வி-யத்தில், அவர் பரலோக மகிமையை விடுவதற்கு முன்பு பூரணராக இருந்தார். மனிதனாகிய கிறிஸ்து இயேசுவான போதும் அவர் பூரணராக, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக" இருந்தார். "அவரிடத்தில் பாவமில்லை." ஆனால் அவரது சீ-ர்களிடத்தில் மாம்சத்தின் பலவீனம் இன்னும் இருக்கிறது. ஆனால் வழி வழியாக வந்த அவர்களது மாம்சீக பலவீனத்தின்படி அவர்கள் தீர்க்கப்படவில்லை. ஆனால் அவர்களது அன்பு மற்றும் அவர்களது இருதயத்தின் வைராக்கியத்தின்படி தீர்க்கப்படுகிறார்கள். அவர்களது மாம்சீக பலவீனத்தை தங்கள் திறமைக்குத் தக்கதாக ஜெயங்கொண்டு, "அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி," தங்களது தலைவரும் இரட்சகருமானவரின் அடிச்சுவட்டில் விசுவாசத்துடன் நடப்பதற்கான அவர்களது முயற்சியினால் இந்த அன்பின் வைரக்கியம் சாட்சி பகரப்படுகிறது.

R5216

## Afflicted, Yet a Comforter

# பாதிக்கப்பட்டவர், ஆகிலும் ஒரு தேற்றரவாளன்

*ஆதியாகமம் 40 மற்றும் 41*

*“தேவன் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார்.” 1பேதுரு 5: 5*

பழைய ஏற்பாட்டு காலத்தில் யோசேப்பு ஒரு முன்மாதிரியான வாலிபனாக சொல்லப்பட்டிருக்கிறார். சில அம்சங்களில் அவர் காலத்திற்கும் ஒரு முன் மாதிரியாக இருப்பார். எனினும் அங்கே வேறுபாடு இருக்கிறது. யோசேப்பு ஆவியினால் ஜெனிப்பிக்கப் -படுகிறவர்களுக்கு முன்னதாக வாழ்ந்தார். ஆகையால் அவர் ஒரு சுபாவ மனு-ன், கிறிஸ்தவரல்ல. அவர் வேதாகம காலத்திற்கு முன் வாழ்ந்தார். போதனைகளுக்கும் ஞாயிறு பள்ளிகளுக்கும் முன்னர் வாழ்ந்தவர். ஆபிரகாமின் தேவனிடத்தில் அவர் தனது தகப்பனாரிடமிருந்து ஒரு பலமான விசுவாசத்தை சுதந்தரித்துக் கொண்டார். யாக்கோபின் சந்ததி மூலமாக ஆசீர்வாதம் வரவேண்டும் என்ற வாக்குத்தத்தத்தை ஆபிரகாம் பெற்றிருந்தார். அந்த குடும்பத்தைச் சேர்ந்த யோசேப்பு தேவனிடம் பயபக்தியுடன் தாழ்மையாக, உயர்ந்த வாழ்க்கை வாழ நாடினார். தேவன் பேரில் அவரது விசுவாசம், தேவனுடைய வாக்குத்தத்தத்தில் அவரது நம்பிக்கை (கப்பலின்) சுக்கானைப் போல அவரது வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் அவரை வழிநடத்தி இயக்கியது. தேவனை சந்தோ-ப்படுத்துவதும் அவரது அங்கீகாரத்தை பெறுவதுமே அவரது நோக்கமாக அவர் செய்யும் எல்லா காரியங்களிலும் காணப்பட்டது.

இப்படிப்பட்ட விசுவாசம் அந்த காலத்தில் அரிதானது. இந்தக் காலத்திலும் அதே போல இருக்கிறது. அதன் பலனாக அவர் தனது எஜமானனின் வீட்டில் விசாரணைக்காரனாக உயர்த்தப்பட்டார். அவரது மனசாட்சி அவரை நேர்மைக்கும், ஜாக்கிரதைக்கும் மற்றும் சிக்கனத்திற்கும் வழி நடத்தியது. அவரது எஜமானன் எல்லாவற்றையும் யோசேப்பின் பொறுப்பில் ஒப்படைக்கக் கூடியவராக இருந்து ஒப்படைத்தார். வாலிபனாகிய யோசேப்பின் முன்னடையாளம் தற்காலத்தில் எல்லா இடங்களிலும் மதிக்கப்படுகிறது. ஆம், நம்பிக்கையுள்ள மனிதனாக, விசுவாசமுள்ள மனிதனாக, நேர்மையான மனிதனாக, சிக்கனமுள்ள மனிதனாக அவர் மதிக்கப்படுகிறார். இந்த அனைத்து குணங்களோடு, பயபக்தி, தேவனிடத்தில் விசுவாசம், மற்றும் பொறுப்பை உணர்தல் போன்றவை அவரோடு இணைகிறது.

யோசேப்பு செழுமையாக இருந்தபோது ஒரு பேராபத்து வந்தது. அவர் ஒழுக்கத்தில் உறுதியாயிருந்தது, அவரது எஜமானியை கோபம் கொள்ள வைத்தது. அவள் அவர் மேல் தவறான குற்றம் சுமத்தினாள். எஜமானனுக்கும் துரோகம் செய்ததாவும் கொடூரமான குற்றம் செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் அவர் எல்லா சமயத்திலும் குற்றமற்றவராக இருந்தார். இந்த குற்றமற்ற தன்மையை தேவனே, தேவன் மட்டுமே அறிந்திருந்தார். யோசேப்பின் குற்றத்தை கேள்வி கேட்க முடியாத அளவுக்கு சூழ்நிலைகளின் ஆதாரங்களை சத்துருவானவன் மிகவும் பலமானதாய் செய்திருந்தான். ஷேக்ஸ்பியர் என்ற கவிஞர் மனுகுலத்தின் இந்த பலவீன குணத்தை இப்படியான வார்த்தைகளில் குறிப்பிடுகிறார். “காதல் மறுக்கப்பட்ட பெண்ணின் கோபமே வேறு எந்த கோபத்தை காட்டிலும் பெரியது.”

நீதியான வழிகளில் நடக்க நாடுகிறவர்களின் வாழ்க்கையில் மிகவும் பயங்கரமான நிலைமைக்கு விழுந்து போகும்படி தேவன் அனுமதிப்பது எவ்வளவு விநோதமாக காணப்படுகிறது. இந்த தீமை ஏன் யோசேப்பை விழச் செய்தது. நாம் கற்பனை செய்து பார்க்கிறோம். தீர்க்கதரிசியின் வசனம் கூறுகிறதாவது: “தீமை செய்தவர்கள் திடப்படுகிறார்கள். அவர்கள் தேவனை பரீட்சை பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்கள். நீதிமானாக ஜீவிக்க நாடுகிறவர்கள் துன்பப்படுகிறார்கள்.”

யோசேப்பு தன்னை எகிப்தின் சிறைக்கு அனுப்பிய தேவ ஞானத்தை கேள்வி கேட்க தன்னை ஆட்படுத்தவில்லை. அது மாத்திரமல்ல தன்னை எகிப்துக்கு அடிமையாக விற்றுபோட அனுமதித்த தெய்வீக ஞானத்தைக் கூட கேள்வி கேட்க துணியவில்லை. தேவன் பேரில் உள்ள அவரது விசுவாசம் அந்த சோதனையை சகித்தது. தனது பூமிக்குரிய நம்பிக்கைகளும் நோக்கங்களும் மூடப்பட்டுவிட்டதாக அவர் கண்டாலும் அவர் பலமுள்ளவனானார் - உலகத்திற்கும் மரித்தவனானார். சர்வ வல்லவரின் மேலுள்ள விசுவாசத்தை அதிகமாக வளர்த்தார். எந்த விலை கொடுத்தாவது, நீதியாகவும், நிதானமாகவும் பக்தி வைராக்கியத்துடனும் வாழ தீர்மானித்தார். சிறையில் கூட அவரது உண்மைத் தன்மை, புத்திக்கூர்மை மற்றும் பொதுவான நற்குணம் அங்கீகரிக்கப்பட்டது. அவர் சிறைச்சாலை அதிகாரியின் நம்பிக்கைக்கு பாத்திரவானாகி உதவிக்காரனாகவும் ஆனார். இப்படிப்பட்ட குணம் அவர்கள் எவ்வளவுதான் இழிவு படுத்தப்பட்டாலும் தவறாக கூறப்பட்டாலும் அவதூறாக பேசப்பட்டாலும், முடிவாக அவர்களை உயர்த்தும். இந்த கொள்கை அந்த காலத்தைப்போல இப்பொழுதும் உண்மையாயிருக்கிறது.

### பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியின் சொப்பனங்கள்

கடந்த காலத்தில் சிறைச்சாலையின் ஒழுங்குமுறைகள் தற்காலத்தைப்போல அவ்வளவு முறையானதாக இல்லை. ஏதாவது நடக்காதிருந்தால், யோசேப்பின் காரியம் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்படாதிருந்து, வருடக்கணக்காக சிறைச்சாலையில் இருந்திருப்பார், அவர் மறக்கப்பட்டிருப்பார், காலவரையின்றி சிறைச்சாலையிலேயே தொடர்ந்து இருந்திருப்பார். அவர் இருபத்தெட்டு வயதான போது, இரண்டு உயர்ந்த அதிகாரிகள் பார்வோன் ராஜாவினால் குற்றம் சாட்டப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டனர். இவர்களில் ஒருவர் அரசாங்க செயலர் மற்றும் பானபாத்திரக்காரர். அடுத்தவர் சுயம்பாகியின் தலைவன்.

யோசேப்பு சிறைச்சாலையின் பொறுப்பில் இருந்ததால், அவர்களோடு தொடர்புக்கு வந்து, அவர்களது துக்க முகத்தை கண்டு ஆறுதல் அளித்தார். எப்படிப்பட்ட உயர்ந்த முன் உதாரணம்! யோசேப்பு மனந்தளராமல், துக்கமாயிராமல், மிகவும் உற்சாகத்தோடு, தேவனை நம்பி, முடிவாக தனக்கு ஒரு வழியை திறக்கும் சில சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவார் என்று காத்துக்கொண்டிருந்தார். இப்படிப்பட்ட உயர்ந்த குணமுடையவர்கள் நேரத்தை ஒதுக்கி துன்பத்தில் உள்ளவர்களிடம் ஆறுதலான வார்த்தைகளை பேசுவார்கள். தற்கால உலக மனிதர்களுக்கு எப்படிப்பட்ட உதாரணம் ! உலக மனிதர்களை காட்டிலும் அதிக அனுகூலம் உடைய தற்கால கிறிஸ்தவ மனிதர்களுக்கு எப்படிப்பட்ட ஓர் உதாரணம் !

நம்முடைய இனம் மிருக சுபாவத்திலிருந்து அதி விரைவாக பரிணாம வளர்ச்சியடைந்துகொண்டிருக்கிறது என்று கூறுபவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஆனால் யோசேப்பு, நான்காயிரம் வருடங்களுக்கு முன்பாக ஆதாமின் சிருஷ்டிப்புக்கு இரண்டாயிரம்

வருடங்களுக்கு பிறகு, வாழ்ந்ததால், குரங்கிலிருந்து சில குணங்களே நீக்கப்பட்ட ஒரு விலங்காகவே இருந்திருக்க முடியும். ஆனால் இந்த சிறிய கதையால் எப்படி ஒரு வேறுபாடான கருத்து அவரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரது அனுபவத்தினால் ஒரு நீதியை குறிப்பிட முயலவில்லை. ஆனால் அது உண்மைச் சம்பவமாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கைதிகளான இரு அதிகாரிகளும் மன கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிந்த யோசேப்பு அவர்களது கனவுகளுக்கு விளக்கம் சொல்ல முன்வந்தார். ஒன்று உற்சாகம் அளிப்பதாகவும் மற்றது பயமுறுத்துவதாகவும் இருந்தது. அவர் பானபாத்திரக்காரனிடம் இன்னும் மூன்று நாளில் ராஜாவிடம் வேலைக்கு திரும்பச் செல்வான் என்றும் சுயம்பாகி இன்னும் மூன்று நாளில் மரத்திலே தூக்கி போடப்படுவான் என்றும் கூறினார். பானபாத்திரக்காரன் விடுதலை அடைந்த பிறகு அவன் செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கிறது என்றும், அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்த நண்பனை அவன் விடுதலை அடைந்த பிறகு ஞாபகத்தில் வைத்து தகுந்த அதிகாரியிடம் கூறி தனது வழக்கை விசாரிக்கவும் அதனிமித்தம் விடுதலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் யோசேப்பு அவனிடம் கூறியிருந்தார்.

ஆனால் ஐயகோ, மனக்கடினம் எவ்வளவு பரவியிருக்கிறது! பானபாத்திரக்காரன் யோசேப்பை, தனது சிறை நண்பனை இரண்டு வருட காலமாக மறந்துவிட்டான் ! பார்வோனின் கனவின் மூலம் இது அவனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது; எகிப்தின் ஞானவான்கள் யாரினாலும் அந்த கனவின் பொருளை கூற முடியவில்லை. அவனது மறதிக்கு மன்னிப்பு கேட்கும் வண்ணமாக, பானபாத்திரக்காரன் தன்னுடைய மற்றும் சுயம்பாகியின் சிறையில் அவர்களது கனவின் அனுபவங்களையும் தெய்வீக சக்தியினால் ஆச்சரியமான யோசேப்பு என்ற வாலிபன் கனவின் பொருளை கூறினதையும் அதன்படி நடந்ததையும் ராஜாவிடம் கூறினான்.

இந்த இரண்டு வருட காலத்தில் யோசேப்பு சந்தேகப்படாமல் நம்பிக்கையுடன் அவரது வழக்குக்காக காத்துக்கொண்டிருந்தார். அவர் தேவனிடத்தில் உள்ள விசுவாசத்தில் தளர்வடையாமல் கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்து அவரது அனுபவங்கள் அவரது நன்மைக்காக இருக்கும் என்று அங்கீகரித்தார். அதே போலவே இருந்தன. யோசேப்பு முப்பது வயதை அடைந்த போது - பழங்கால பிரமாணத்தின்படி மனித பருவத்தை அடைந்த போது, பார்வோன் அவருக்கு ஆள் அனுப்பி, அவனது கனவுக்கு பொருளை கேட்டு, அவருக்கு உயர்ந்த வெகுமதியைக் கொடுத்தான்.

## பார்வோன் கனவுக்கு பொருள் கூறப்பட்டது

பார்வோன் இரண்டு கனவுளைக் கூறினான். முதல் கனவில் புஷ்டியான ஏழு பசுக்களைக் கண்டான். பிறகு இதுவரை அவன் கண்டிராத இளைத்ததும் மகா அவலட்சணமும் கேவலமுமான ஏழு பசுக்களைக் கண்டான். கனவில் இளைத்த ஏழு பசுக்கள் புஷ்டியானவைகளை பட்சித்தது. இதன் பிறகும் இளைத்த பசுக்கள் கேவலமாகவே இருந்தன. இரண்டாவது கனவில் முதிர்ந்த நன்கு விளைந்த ஏழு தானிய கதிர்களை வளரக் கண்டான். பின்பு பிரயோஜனமில்லாத சாவியானதும் பதரானதுமான ஏழு கதிர்கள் பூமியிலிருந்து வளர்ந்தன. சாவியான ஏழு கதிர்கள் புஷ்டியான ஏழு கதிர்களை விழுங்கிப் போட்டு சாவியாகவே காணப்பட்டது.

வாலிபனான யோசேப்பு கனவுகளின் விளக்கங்களை உடனே கூறினார்.அதைச் சொல்வதற்கு முன், இதை நான் அல்ல, தேவனே வெளிப்படுத்தினார் என்று கூறினார். வேத வாக்கியங்கள் இதை எடுத்துக்காட்டுகின்றன. "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்." "அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்." (நீதிமொழிகள் 3:6; சங்கீதம் 37:4)

இரு கனவுகளும் ஒரே அர்த்தத்தையே குறிக்கின்றன என்று யோசேப்பு விளக்கினார். எகிப்து தேசமெங்கும் பரிபூரணமான விளைச்சல் உண்டாயிருக்கும், ஏழு வருடங்கள் வரும். அதன்பின்பு பஞ்சம் உண்டாகும், ஏழு வருடங்கள் வரும். அப்பொழுது தேசத்தின் பரிபூரணமெல்லாம் மறக்கப்பட்டுப் போய், அந்த பஞ்சம் தேசத்தை பாழாக்கும். தொடர்ந்து யோசேப்பு கூறியதாவது: பார்வோன் இதைப் பயன்படுத்திக் கொள்ளும்படியாக தேவன் இதை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகையால் ராஜா ஒரு தனி அதிகாரியை நியமித்து, ஏழு வருட அதிகப்படியான தானியங்களை எல்லாம் சேர்த்து வைத்து, பஞ்சமாயிருக்கும் ஏழு வரு-ங்களில் பயன்படுத்த வேண்டும் என்று யோசனை கூறினான்.

பார்வோன் இதை ஞானமாக ஏற்றுக்கொண்டு, தனது ஜனங்களின் நன்மையை மனத்தில் கொண்டு, யோசேப்பையே அதிகாரியாக நியமித்து, அதிகப்படியான தானியங்களை சேமித்து, பஞ்ச காலத்தில் அதை விநியோகிக்கும்படி கூறினான்.

இப்படியாக யோசேப்பு சிறையிலிருந்து வெளியேறி பதினான்கு வருட ஒப்பந்தத்துக்கு வந்தார். பொல்லாங்கினால் துன்பப்பட்டவர் திடீரென்று, அந்த நாட்களில் பெரிய வல்லரசாயிருந்த எகிப்தின் ராஜா பார்வோனுக்கு அடுத்தபடியாக அவர் உயர்த்தப்பட்டார். யோசேப்பின் வெற்றியிலும், உயர்விலும் தேவனுடைய கரம் இருந்ததை நாம் சந்தேகிக்க முடியுமா? நிச்சயமாக முடியாது. யோசேப்பின் துன்பகால அனுபவத்தில் தெய்வீக சலுகையின் குறைவை நாம் யூகிக்க முடியாது. மாறாக அவரது கஷ்ட காலத்தின் பாடங்கள் மற்றும் அனுபவங்கள் ராஜ்யமெங்கும் பார்வோனின் வார்த்தையாக, வாயாக இருப்பதற்காக தயார்படுத்தப்படவேயாகும்.

யோசேப்பின் அனுபவங்கள் இயேசுவுக்கும் அவரது சீ-ர்களாகிய சபைக்கும் முன்னடையாளமாக இருந்தது என்பதை சென்ற வார பாடத்தில் பார்த்தோம். மானிட கிருபையும், பொறுமையும் அன்பு மற்றும் விசுவாசத்திற்கும் மிகவும் நெருக்கம் உடையதாக இருக்கிறது என்று வேதாகமம் கூறுகிறது. பரிசுத்த பவுல் இதை நினைவுப்படுத்தும்படி அறிவிக்கிறதாவது: "கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்.... தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ... எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்கு கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்கள்." (எபிரேயர் 12: 6-8)

சுவிசே- யுகத்தில் இயேசுவுக்கும் அனைத்து விசுவாசமுள்ள அப்போஸ்தலர்களுக்கும் நடந்தது போலவே இயேசுவின் சீ-ர்களுக்கும் நடக்கும். அர்ப்பணிக்கப்பட்ட சபையார் அனைவருக்கும் சந்தேகத்திற்கிடமில்லாமல் இது தொடர்வது உண்மை. ஏனெனில் கர்த்தராகிய இயேசு இந்த உயர்ந்த நற்குணசாலிகளை நேசிக்கிறார். சோதனைகள், பரீட்சைகள், ஒழுங்குகள் முதலானவைகளுக்கு அவர்கள் பாத்திரர்கள் என்று எண்ணுகிறார். கனம், மகிமை, சாகாமை மற்றும் மாபெரும் பொறுப்புகளுக்கு பிதாவானவரால் அழைக்கப்பட்டிருக்கிற இயேசு மற்றும் அவரது சகோதரர்களாகிய சபைக்கும் இந்த சோதனைகள் அவர்களை தகுதிப்படுத்துவதற்கும் அவசியமாயிருக்கிறது.

## துன்பத்தின் மதிப்பு

மகன் யோசேப்பின் மீது யாக்கோபின் அன்பு, பல வருண ஆடை போன்ற சலுகைகளால் வெளிப்படுத்தப்பட்டது. தேவன் குறுக்கிட்டு யோசேப்பை அவரது தகப்பனாரிடமிருந்து முற்றிலுமாக பிரித்திராவிட்டால் யாக்கோபு மூலம் அவர் கெட்டுப் போயிருப்பார். அநேக தகப்பனார்கள் விசே-மாக ஐசுவரியவான்கள் இதேபோல தவறுகளை செய்கிறார்கள். ஆகையால் செல்வந்தர்களின் பிள்ளைகள் எப்பொழுதும் அவர்களது தகப்பனாருக்கு ஒரு நம்பிக்கையாக இருப்பதில்லை.

எனினும் நமது மாபெரும் பரம பிதாவானவர் இப்படிப்பட்ட தவறுகளை செய்யவில்லை. சோதனைகளும் , கஷ்டங்களும் தேவனிடத்தில் அவர்களது உறவையும், அவர்களது மேல் உள்ள அவரது அக்கறையையும் குறிப்பிடுவதாக அவரது பிள்ளைகள் உறுதியளிக்கப்படுகிறார்கள். உண்மைதான் அவரது தெய்வீக கிருபை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது: "அவர்கள் தம்முடையவர்கள் என்பதை கர்த்தர் அறிவார்." அவருடன் உடன்படிக்கைக்குள் நுழைந்து, அவரது ஊழியக்காரர்களாகவும் பிள்ளைகளாகவும் ஆன அவரது அர்ப்பணம் செய்த ஜனங்களிடம் அவர் விசேஷித்த விதமான தொடர்பு கொண்டிருக்கிறார். அவர்களுக்கு மட்டுமே, "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" என்கிற வாக்குத்தத்தம் உடையதாக இருக்கிறது. (ரோமர் 8: 28)

இந்த விசேஷித்த அழைப்பு இந்த சுவிசே- யுகத்தின் சபையாருக்கும் மட்டுமே பொருந்தும் போது, ஆபிரகாம் காலத்திலிருந்து எபிரேயருக்கு பொருத்தமாயிருக்கிறது என்பதில் அர்த்தமிருக்கிறது.தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருந்த எபிரேயரை சேர்ந்தவராக யோசேப்பு இருந்தார்; இஸ்ரலேயர் தேவனுடைய பிள்ளைகளாக இருந்ததினால் அநேக சோதனையான அனுபவங்களை கடந்து வந்தார்கள் என்பதை கவனிப்பது பிரயோஜனமாக இருக்கும். அவர்கள் தேவனுடன் உடன்படிக்கைக்குள் வராதிருந்தால் அந்த அனுபவங்கள் அநேகவற்றிலிருந்து அவர்கள் தப்பியிருக்கலாம். ஆனால் சோதனைகளிலும் துன்பங்களிலுமிருந்து தப்பியிருந்தால், அவர்கள் சில சலுகைகள் மற்றும் ஆசீர்வாதங்களிலிருந்தும் தப்பியிருப்பார்கள். தேவன் கொடுக்கிற ஆசீர்வாதங்களுடன் அவர்களை தயார்படுத்துவதற்கான துன்பங்கள் ஒப்பிடத்தக்கவைகள் அல்ல.

## யூத மற்றும் கிறிஸ்தவ தேர்ந்தெடுத்தல்கள்

யூத ஜனங்களும் அதற்கு பிறகு கிறஸ்தவர்களும் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட, தேர்வு செய்யப்பட்ட, ஆபிரகாமின் மாம்சீக மற்றும் ஆவிக்குரிய வித்து என்று வேதாகமம் அறிவிக்கிறது என்று இது நமக்கு நினைவுபடுத்துகிறது. இந்த இரு வகுப்பாருக்கும் கொடுக்கப்பட்ட சலுகை வேறு ஜனங்களுக்கு வழங்கப்படவில்லை. இரண்டு காரியங்களிலும் அவர்கள் அழைக்கப்பட்ட எதிர்கால மகிமைக்காக தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் சோதனையான அனுபவங்கள் பொருத்தமானதாக இருக்கிறது.

எனினும் அழைக்கப்படாதவர்களுக்கும் ஒரு மகா ஆசீர்வாதத்தை தேவன் வைத்திருக்கிறார். மேசியாவின் ஆயிர வருட ஆளுகையின் காலத்தில் தெரிந்துகொள்ளப்பட்ட சபை, பரிசுத்தவான்கள் மட்டுமே,தேவனுடைய மாபெரும் ராஜ்யத்தில் மேசியாவின் உடன் சுதந்தரராக இருப்பார்கள். அந்த ராஜ்யம் உலகத்தின் கட்டுப்பாட்டை தனது அதிகாரத்தில் எடுத்துக்கொள்ளும். அப்பொழுது எபிரேயரிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் வேறு வேலையில் பயன்படுத்தப் -படுவார்கள். அவர்கள் பரலோக சுபாவத்தில் இருக்கப் போகிற கிறிஸ்தவ சபையோடு சேர்ந்து பூமியில் இருந்து கொண்டு கிரியை நடப்பிப்பார்கள். இந்த இரு இஸ்ரயேலர் வகுப்பாரின் மூலமாக தேவனுடைய ஆசீர்வாதங்கள் சகல ஜாதிகள், கோத்திரங்கள், ஜனங்கள் மற்றும் பாஷை-க்காரர்களுக்கும் பொழியப்படும்.

தேவன் இந்த இரண்டு தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரைத் தவிர வேறு யாரையும் அவர்களது காரியங்களில் விசேஷித்த மேற்பார்வை செய்யாதிருந்தாலும், ஒரு பொதுவான வழியில் முழு மானிட வம்சங்களுக்கும் மாபெரும் துன்பத்தின் பாடங்களை அனுமதித்திருக்கிறார் என்று நாம் பார்க்கிறோம். விசேஷித்த சோதனைகள் மற்றும் துன்பங்கள் தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாருக்கு, விசேஷித்த ஆசீர்வாதம் மற்றும் தேவனுடைய முகவர்களாக வேலை செய்கிற தகுதிகளுக்கு ஏதுவாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறதுபோல, உலகின் பொதுவான உபத்திரவம் பொதுவான பாடங்களை கொடுக்கும்படியாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இது பாவம் மற்றும் மரணத்துடனான சகல அனுபவங்களையும் கொடுத்து, பாவத்தின் மீறுதல்கள் அனைத்தையும் போதித்து சகலருக்கும் உதவிகரமாக இருக்கும்.

இதற்கிடையில் மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது, சாத்தான் கட்டப்படும் போது, நீதியின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, சாபம் நீக்கப்பட்டு, ஆசீர்வாதங்கள் பொழியும் போது, துக்கம் மற்றும் கண்ணீர்,கூக்குரல் மற்றும் மரணத்தின் பாடங்கள் அனைத்தும் அதன் மதிப்பை நிரூபிக்கும். தற்காலத்தின் தீமை மற்றும் துக்கத்திற்கு மாறாக, மனுக்குலம் தேவனுடைய மாபெரும் ஆசீர்வாதங்களை எதிர்காலத்தில் பெரும்பாலும் உணர்ந்து கொள்ளும். இந்த துக்கங்கள் மற்றும் கண்ணீர் யாவும் தேவனுடைய கட்டளைகளை மீறினதின் பலன்தான் என்றும் பிரமாணங்களை புறக்கணித்ததினால்தான் என்றும் சீக்கிரத்தில் அவர்கள் முடிவாக முழுமையாக கற்றுக் கொள்வர்கள். இந்த பாடம் சந்தேகத்திற்கிடமில்லாமல் மறக்க முடியாத ஒன்றாக இருக்கும்.

எங்கெங்கே துன்பமாகிய ஏர்க்கொழு போயிருக்கிறதோ, அது தரிசு நிலங்களை உழுது, தெய்வீக சத்தியம் மற்றும் கிருபையின் விதைகளை தயார் செய்கிற வேலையை செய்திருக்கிறது. அடுத்த யுகம் மேசியாவின் நன்மை செய்கிற ஆட்சி, தேவனைப் பற்றிய அறிவு என்கிற விதையை விதைக்கிற காலமாகவும் அவருடைய மகிமையான குணலட்சணத்தையும் திட்டங்களையும் உணருகிற காலமாகவும் இருக்கும். சத்திய அறிவு அனைவருக்கும் கொடுக்கப்பட்டு, நீதிக்குரிய உதவி, வெளியரங்கமாக இருக்கும் அந்த நாளில் இவைகளை அறிவுப்பூர்வமாக மறுத்து நீதிக்கு பதிலாக பாவத்தை தேர்ந்தெடுக்கிறவர்களை தவிர மற்ற அனைவரும் முடிவாக இந்த ஆசீர்வாதங்களில் நித்தியமாக பங்குபெறுவார்கள்.

R 5217

# God's Sympathy for His people
# தேவனுடைய பிள்ளைகளுக்கு அவருடைய தயவு

"நித்திய வாசியும், பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்." ஏசாயா 57:15

யேகோவா நித்தியமாக வாழ்கிறவராக உன்னதமானவராக, உயர்ந்தவராக இருக்கிறார். மலைகள் நிலைபெறுவதற்கு முன்னும் குன்றுகள் உண்டாகும் முன்னும் முதற்பேறானவர் சிருஷ்டிக்கப்படுமுன்னும் அவர் தேவனாயிருக்கிறார். எரிகிற முட்செட்டியில் அவர் மோசேயிடம் கூறியதாவது: "இருக்கிறவராகவே இருக்கிறேன்." (யாத்திராகமம் 3:14) எனினும் அவர் மிகவும் தயவுள்ளவர் என்று வேத வாக்கியங்கள் காண்பிக்கின்றன. அவர் அன்பின் மற்றும் இரக்கத்தின் தேவனாக இருக்கிறார்.

தேவன் மனுக்குலத்தோடு போராடியிருந்தால், சண்டையின் முடிவில் மனுக்குலம் முற்றிலும் இல்லாமல் அழிந்து போயிருக்கும் என்று நாம் எடுத்துக்கொண்ட வேத பகுதி நமக்கு அறிவிக்கிறது. ஆனால் அவர் மண்ணென்று நினைவு கூறுகிறார்; நம்மேல் மனுதுருக்கம் கொண்டிருக்கிறார். இந்த காரியத்தில் அவர் மற்ற புற மதக்கடவுள்களிடமிருந்து வேறுபடுகிறார். அவர்கள் அகந்தையுள்ளவர்களாக இருந்து தங்கள் அதிகாரத்தில் உள்ளவர்களை பழிவாங்குகிறவர்களாக இருப்பார்கள்.

நமது தேவன் மகா உயர்ந்தவராகவும், உன்னதமானவராகவும் இருந்தாலும், பாவத்திற்கு வருந்துகின்ற, உள்ளம் உடைந்தவர்களிடம் தாழ்மையான ஆவி உடையவர்களிடம், தாங்கள் அபூரணர் என்று உணருகிறவர்களிடத்தில், தேவனுக்கு இசைவாகவும் பரிசுத்தமாகவும், வாழ விரும்புகிறவர்களுக்கு தயை உள்ளவராக இருக்கிறார். தாழ்மையான ஆவிக்கு புத்துயிர் கொடுக்க, அவர்களை பலப்படுத்த, அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் அருகிலிருக்கிறார். பூமிக்குரிய அதிகாரம் கொண்டவர்கள் தமக்கு கீழாக உள்ளவர்களை மண்ணோடே நசுக்கி போட்டிருக்கிறது போல, அவர் நசுக்காதபடி, அவர்களுக்கு நல்வழியில் உதவி செய்து, உடைந்த உள்ளமுள்ளவர்களுக்கு புத்துயிர் கொடுப்பார். நமது தேவன் இரக்கம், மனதுருக்கம் மற்றும் அன்பு உடைய தேவனாக இருக்கிறார் என்று இவைகள் காண்பிக்கிறது. அவரால் வழிநடத்தப்பட அவர்கள் விரும்பினால், அவர்களது உள்ளங்களை உயிர்ப்பிக்கவும், அவரோடு அவர்களை இணக்கத்திற்கு கொண்டு வருவதிலும் அவர் சந்தோ-ம் அடைகிறார்.

### சுய நம்பிக்கையின்மை ஒரு சாதகமான நிலைமை

உடைந்த உள்ளத்திற்கும் நொறுங்கின உள்ளத்திற்கும் வித்தியாசம் உண்டு. உடைந்த உள்ளம் என்பது துன்பத்திலும் வேதனையிலும் கவிழ்ந்திருத்தல்; நொறுங்கின உள்ளம் என்பது நீதிக்கு விரோதமாக நடப்பித்த கிரியைகளுக்காக தொடர்ந்து ஆழ்ந்து வருந்துதல் ஆகும். உடைந்த சித்தம் என்பது அதே மாதிரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர்கள் சித்தங்கள் உடைந்து போயின ; ஆனால் அவர்கள் தேவனுடைய சத்தத்துக்கு கீழ்ப்படியாதவர்கள்.

வருந்துகிறவர்களாக இருப்பவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். பாவத்தைக் குறித்த மனப்பாங்கின் ஒரு மாற்றத்தை அது குறிக்கிறது. ஒருவர் தெய்வீக உதவியை நாடுகிறவராகவும், தேவனுக்கு கீழ்ப்படிகிறவராகவும், தேவ சித்தத்தை செய்ய தயாராகவும் இருந்தால், இந்த தாழ்மையான நம்பிக்கையில்லாத நிலைமை சாதகமான ஒன்றாக இருக்கும். இப்படிப்பட்டவர்கள் நிச்சயமாக தேவனுடைய ஆசீர்வாதத்தை பெறுவார்கள். ஏனெனில் கர்த்தர் உடைந்த உள்ளம் உடைய ஒவ்வொருவருக்கும் அருகே இருக்கிறார். முழு அர்ப்பணத்திற்கான வழி அவருக்கு மிக அருகாமையிலிருக்கும்.

இப்படிப்பட்ட நொறுங்கின இருதயத்தை உடையவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்களாக இருந்ததால், தீர்க்கதரிசி தாவீது கூறுவது போல், தேவன் அவர்களை அவர்களது துன்பங்களிலிருந்து பாதுகாத்து, விசாலமான இடத்திலே கொண்டு வருவார். (சங்கீதம் 18:19) இது அவர்களை அவர்களது பண கஷ்டங்களிலிருந்து விடுவிப்பார் என்று அர்த்தமல்ல. ஆனால் பணத்தை விட உயர்ந்ததாகிய சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் தருவார். குடும்ப பிரச்சனை இருந்தால், நல்ல ஆறுதலையும் புத்துணர்ச்சியையும் கொடுக்கக்கூடிய ஒரு உயர்ந்த நண்பனைக் காண்பார்கள்.

எங்கேயும் சோர்வடைந்து ஆறுதல் அடையாதவர்களே வாருங்கள்!
கிருபாசனத்தண்டைக்கு வாருங்கள், ஆர்வத்துடன் மண்டியிடுங்கள்.
காயம்பட்ட உங்கள் இருதயங்களை இங்கே சொல்லுங்கள்;
உங்கள் மன வேதனைகளை இங்கே கொண்டு வாருங்கள்;
பரலோகம் குணப்படுத்த முடியாத துன்பம் பூமியிலே இல்லை.

தனிமையின் சந்தோ-ம், வழி தவறியதில் வெளிச்சம்,
மன வருத்தத்தில் நம்பிக்கை, மங்காதது, பரிசுத்தமானது!
தேற்றரவாளன் இங்கே பேசுகிறார், மென்மையாக கூறுவதாவது:
பரலோகம் குணப்படுத்த முடியாத துன்பம் பூமியிலே இல்லை.

### கர்த்தருடைய மீட்பின் முறைமை

"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று வேதவாக்கியங்கள் நமக்கு ஊறுதியளிக்கின்றன. எனினும் தேவன் அங்கீகரிக்கக்கூடிய இணையான நீதி இருக்கிறது. தங்களால் முடிந்தவரை தேவனுக்கு இசைந்திருக்க நாடுகிறவர்களும், நீதியான வழியில் நடக்கிறவர்களும் அதே சமயத்தில் நமது இரட்சகரின் விலையேறப்பெற்ற இரத்தத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களும் நீதிமான்களாக பேசப்படுகிறார்கள். இவர்களைப் பற்றி கூறப்படுகிறதாவது: "நீதியின் மேல் பசிதாகம் உடையவர்கள் பாக்கியவான்கள்." (மத்தேயு 5:6)

எனினும் இந்த வகுப்பார் துன்பமடைவார்கள். தேவ பக்தியாய் நடப்பவர்கள் துன்பப்படுவார்கள் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. (அப்போஸ்தலர் 14:22; 2 தீமோத்தேயு 3:12; ரோமர் 5: 3-5) இது ஏன் உண்மையாக இருக்கிறது என்றால், உலகமானது எதிர்திசையில் மாம்சத்தின் திருப்தி மற்றும் சுயநலத்தின் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. நாம் வாசிக்கிறதாவது: "ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை." (1 யோவான் 2: 15) ஆண்டவருடைய அடிச்சுவடுகளை சிலர் பின்பற்றுகிற இந்த சுவிசே- யுக காலத்தில், இது விசேஷித்தவிதமாக உண்மையாக இருக்கிறது. நீதியான வழியில் சிலர் வாழ நாடின காலமாகிய யூத யுகத்திலும் இது உண்மையாக இருந்தது. கர்த்தர் அவர்களது துன்பங்களிலிருந்து அவர்களை விடுவித்தார். அதாவது சோதனையிலிருந்து அவர்களை மறைக்காதபடிக்கும், அவர்களது துன்பங்கள் அவர்களை மேற்கொள்ளாதபடிக்கும் பாதுகாத்தார்.

பழங்கால பாத்திரவான்கள் தங்கள் சார்பாக தெய்வீக சலுகை அப்பியாசப்படுத்தப்பட்டதை அவர்கள் முழுவதுமாக உணர்ந்தனர்; காலப்போக்கில் மாபெரும் ஆசீர்வாதங்களும் சலுகைகளும் தொடர்ந்து கிடைக்கும் என்று எதிர்பார்த்து தங்களது உடைமைகள் கெட்டுப்போவதை சந்தோ-த்துடன் எடுத்துக்கொண்டனர். தேவன் அவர்களது சோதனைகளும் துன்பங்களும் அவர்களை மேற்கொள்ளாதபடி அவைகளிலிருந்து அவர்களை விடுவித்தார். இது நமது கர்த்தருக்கும் சபைக்கும் உண்மையாக இருக்கிறது. மற்றவர்களைப் போல நாமும் நமது சோதனைகள் மற்றும் துன்பங்களினால் மனத்தளவில் வருத்தப்படாதபடிக்கு கர்த்தர் நம்மை அவைகளிலிருந்து விடுவிக்கிறார். நமது அனுபவங்களில் நம்மை தொடர்ந்து ஆதரித்து, முடிவாக முதலாம் உயிர்தெழுதலில் நமக்கு ஒரு பங்கை கொடுத்து நம்மை விடுவிப்பார்.

இந்த சுவிசே- யுகத்தில் தேவனுடைய குமாரர்களாக தத்தெடுக்கப்பட்டவர்களை சோதனைகளும் துன்பங்களும் சுற்றிக்கொள்ளும். அவர்கள் விழுந்தால், அவர்கள் இருதயம் நல்ல முத்திரையாக இருந்தால், அவர்கள் இடறியிருக்கிறார்கள் என்ற உண்மை, அவர்கள் பாவத்திற்குள் திரும்பச் செல்லும் உணர்வை தராது. மாறாக, மற்றவர்கள் இடறின போது, “ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே” என்று கூறிய பரிசுத்த பேதுருவைப்போல உணருவார்கள். (யோவான் 6:68) தேவனுடைய உண்மையான ஜனங்கள் அவரைத் தவிர வேறு யாரிடமும் போக விரும்பமாட்டார்கள். அவர்கள் இடறினால், மன்னிப்பிற்கான அவரது ஏற்பாடுகளை பயன்படுத்திக்கொண்டு தாங்களே மீள்வார்கள். இந்த இடறுதல்களினால் தங்களது பலவீனங்களை அறிந்துக்கொண்டு, கர்த்தரிலும் அவரது சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுத்திக் கொள்ளுவார்கள். (எபேசியர் 6:10)

ஒரு நீதியான மனு-ன் பாவத்தில் விழமாட்டான். அதிகமாக அவனுக்கு நடக்கக்கூடிய காரியம் இடறுதல் தான். இடறுதலுக்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. அவன் இருதயம் சரியாக இருந்தால், அவன் எழும்புவான். ஏனெனில் கர்த்தர் அவன் தவறு பண்ணியிருக்கிறான் என்பதைக் காண்பித்து, அதிலிருந்து அவன் விடுபடும் ஒரு வழியையும் காண்பிப்பார். அவன் நீதியை சிநேகிக்கிறவனாயிருந்தால், அநேகந்தரம் அவன் விழுந்தாலும், கர்த்தர் அங்கீகரித்த, நீதியான சரியான வழியை நோக்கி செல்ல விரும்புவான். (சங்கீதம் 37:23,24; நீதிமொழிகள் 24:16)

## தேவனுடைய ஆதரவுக்கான ரூபகாரம்

நமது மனுக்குலத்தைப் பொருத்தவரை விழுகையினால் நாம் பாழாகியிருக்கிறோம். அது நம்மை மிகவும் தாழ்மையாக இருக்கும்படியும் நமது சிறுமையை மற்றும் விழுந்துபோன நிலைமையை உணரும்படியும் செய்கிறது. அது நம்மை பாவத்திற்கு மிகவும் விரோதமாக மிகவும் மனம் வருந்தும்படி ஆக்குகிறது; பாவமானது முழு இனத்தையும் பிடித்து அழிக்கக்கூடிய நோயாக இருக்கிறது என்பதையும், நீதியும் பரிசுத்தமும் உள்ளவர்களைத் தவிர வேறு யாரிடமும் தேவன் இணக்கம் கொள்ளமாட்டார் என்பதையும் உணரும்படி செய்கிறது.

ஆகையால் தேவனோடு இணக்கமாக இருக்கிறவர்கள் அனைவரும் தங்களது குறைபாடுகளுக்காக வருந்துகிறவர்களாகவும் தேவனுடைய உயர்ந்த மற்றும் பரிசுத்தமான தரநிலையை உணர்ந்தவர்களாகவும் இருப்பார்கள். இதற்காக அவர்கள் தேவனுடைய இரக்கத்தையும் அவருடைய உதவியையும் பெறுவார்கள் என்பதை அறிவிக்கிறார். அவர்கள் இருக்கிற மனப்பாங்கை அவர் மெச்சுகிறார். ஆகையால் நமது தலைப்பு வசனம் கூறுவது போல பணிந்தவர்கள் மற்றும் நொறுங்குண்டு பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்க தயாராயிருக்கிறார். இப்படிப்பட்டவர்களுக்கு தமது இரட்சிப்பை காண்பிப்பார், மற்றவர்களுக்கல்ல.

தாழ்மையான உள்ளம் உடையவர்கள் மட்டுமே தங்களது சொந்த நிலைமையை உணர்கிறார்கள். தேவன் மட்டுமே அவர்களது ஆவியை உயிர்ப்பிப்பார். அவர்களை உயர்த்தவும், அவர்களை மறுபடியும் தேவனுடைய பிள்ளைகளாக்கவும் விரும்புகிறார். இவையெல்லாம் ஆசீர்வாதங்களை குறிக்கிறது. இந்த மனோபாவத்தை தற்காலத்தில் பணிந்த, நொறுங்குண்டவர்களிடம் தேவன் காண்பிக்கிறார். பணிந்த, நொறுங்குண்டவர்களிடம் இந்த ஆவியை எப்பொழுதும் உடையவராக இருக்கிறார். கிறிஸ்துவின் ஆளுகை முழுவதிலும் இந்த பணிந்த வகுப்பார் தேவனுடைய ஆதாரவையும் ஆசீர்வாதத்தையும் உடையவர்களாக இருப்பார்கள். பணிந்த நொறுங்குண்டவர்கள் மாத்திரமே நமது கர்த்தரின் உடன் சுதந்தரராக ஆகும் சந்தர்ப்பத்தை பெறுகிறார்கள்.

பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். அவர்களது புரிந்து கொள்ளும் கண்களை திறக்கிறார். அவர்கள் அவரது பிள்ளைகளாகிறார்கள். ஏனெனில் அவர்கள் அவரது போதனையினால் வழிநடத்தப்படவும் அவரது ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளவும் கூடிய மனோபாவத்திலும் இருக்கிறார்கள். இந்த வசனம் தற்காலத்திற்கு மாத்திரமல்ல, அடுத்த யுகத்திற்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. “வாசல்கள் வழியாய் பிரவேசியுங்கள்; பிரவேசியுங்கள்; ஜனத்துக்கு வழியை செவ்வைப்படுத்துங்கள்; பாதையை உயர்த்துங்கள், உயர்த்துங்கள், அதிலுள்ள கற்களைப் பொறுக்கிப் போடுங்கள்; ஜனங்களுக்காக கொடியை ஏற்றுங்கள்.” (ஏசாயா 62:10) இந்த வார்த்தைகள் வரக்கூடிய யுகத்திற்கு தயார்படுத்துவதை குறிப்பிடும் நோக்கத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பெருமையுள்ளவர்களுக்கும், ஆணவம் உள்ளவர்களுக்கும், சுய உணர்வு உள்ளவர்களுக்கும் அங்கே இடமில்லை, பணிந்த உள்ளம் உடையவர்களுக்கு மட்டுமே அங்கே இடமிருக்கும்.

தாழ்மையுள்ளவர்களுக்கு மட்டுமே இந்த தேவனுடைய ஆசீர்வாதங்கள் பண்டக சாலையில் இருக்கிறது என்றால், தற்காலத்தில் தாழ்மையுள்ளவர்கள் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்களே இருந்தால், மனுக்குலத்தில் உள்ள மற்றவர்களின் நிலை என்ன? தேவன் தற்காலத்தில் தாழ்மைப்படுத்தும் சக்தி ஜனங்களுடன் கிரியை செய்ய தேவன் அனுமதிக்கிறார். இது அவர்களுக்கு பணிவை போதித்து, நொறுங்குண்ட இருதயத்துக்கு அவர்களை வழி நடத்த வேண்டும். ஆனால் அடுத்த யுகத்தில் இது அதிகமாக செயல்படுத்தப்படும். “உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியில் நடக்கும் பொழுது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியை கற்றுக் கொள்ளுவார்கள்.” (ஏசாயா 26:9) சகல ஆசீர்வாதங்களும் பணிந்த, நொறுங்குண்டவர்கள் மேலேயே இருக்கும். ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சகல ஜனங்களும் அறியும்படியான

கவனம் ஏற்படுவதற்கு முன்னரே இது மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும்.

இப்பொழுது பணிந்தவர்களும், நொறுங்குண்டவர்களும் தெருவிலே மிதிக்கப்படுகிறார்கள். இப்பொழுது அகங்காரிகள் சந்தோ-ப்படுகிறர்கள். “இப்பொழுது அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம்; தீமை செய்தவர்கள் திடப்படுகிறார்கள். அவர்கள் தேவனை பரீட்சை பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்கள்.” (மல்கியா 3:15) ஆனால் புதுராஜ்யத்தில் தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். (லூக்கா 14:11) எல்லாருக்கும் போதிக்கப்படுவதற்கு தேவன் ஒரு ஆயிர வருடத்தை ஏற்பாடு செய்திருக்கிறார். ஆறாயிர வருடங்கள் காரியங்கள் தவறாக நடந்திருக்கும் போது, ஆயிர வருடம் குறைவானதாகக் காணப்படலாம். ஆனால் ஆறாயிர வருடத்தில் பெரும்பாலான ஜனங்கள் குறைந்த காலமே வாழ்ந்தனர் என்பதையும் பலர் குழந்தையிலேயே இறந்து விட்டார்கள் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

புதிய யூகத்தில் எல்லாம் மாற்றப்படும்; ஒவ்வொருவரும் நீண்ட நாட்கள் வாழ்வார்கள். “அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள். நூறு வயது சென்று மரிக்கிறவனும் வாலிபன் எண்ணப்படுவான். நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான்.” (ஏசாயா 65:20) “நான் நியாயத்தை நூலும், நீதியை தூக்கு நூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தை கல்மழை அடித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக் கொண்டு போகும்.” (ஏசாயா 28:17)

இனி ஒருவன் மற்றொருவனை நோக்கி, “கர்த்தரை அறிந்து கொள் என்று போதிப்பதில்லை. அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.” (எரேமியா 31:34) தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வைத்திருக்கிற உயர்ந்த நிலைமை உணர்ந்து கொள்ளப்படும். இனி பணிவு மற்றும் நல்ல இருதய நிலைமையை உடையவர்கள் அனைவரும் தேவனுடன் இசைவுக்கு வருவார்கள். ஆனால் அவருடன் இசைவுக்கு வர மறுக்கிறவர்கள் பாவத்தின் சம்பளமாகிய இரண்டாம் மரணத்தை அடைவார்கள்.

“எனக்கு முன்னே இருக்கும் வழியை நான் அறியேன்,
அது சந்தோ-த்தையோ, துன்பத்தையோ கொண்டு வரலாம்;
என்ன மேகங்கள் எதிர்காலத்தில் தொங்கும்,
என்ன பூக்கள் சாலையோரம் பூக்கும்.
ஆனால் எனக்கு பின்னே ஒருவர் பயணிக்கிறார்;
துன்பத்திலே, சந்தோ-த்திலோ, கைவிடுவதில்லை
இதுவே என் ஆறுதலும் தேறுதலும் ஆகும்.
‘நான் போகும் வழியை அவர் அறிவார். ’”

**R5219**

## Privileges of the sons of God
## தேவனுடைய பிள்ளைகளின் சலுகைகள்

“உங்களுக்கு இன்னது தேவை என்பதை உங்கள் பிதா அறிந்திருக்கிறார்.” மத்தேயு 6:8

*****

இந்த வார்த்தைகள் பொதுவாக உலகத்திற்கு சொல்லப்பட்டவைகள் அல்ல. ஏனெனில் அகில உலகமும் தேவனுடன் எந்தவித உறவும் இல்லாமல் பாவத்தில் விழுந்து கிடக்கிறது. இவைகள் சாதாரண யூதர்களுக்கு சொல்லப்பட்டதல்ல. ஏனெனில் யூதர்களும் தேவனுடன் இணக்கம் இல்லாதிருக்கிற ஆதாமின் இனத்தின் அங்கங்களாக இருக்கிறார். அவர்களது உடன்படிக்கை குமாரர்களுக்கு உரியதல்ல, ஊழியக்காரர்களுக்குரியது. மோசே பணிவிடைக்காரனாய் அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். (எபிரேயர் 3:5) இஸ்ரயேலர்கள் தேவனுடைய பிள்ளைகளாக குறிப்பிடப்படவேயில்லை. தேவன் அவர்களுக்கு எதிர்காலத்தில் என்ன செய்யப்போகிறார் என்பது குறித்து தீர்க்கதரிசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் அவர்களது பிதாவாகவோ அல்லது அவர்கள் அவரது பிள்ளைகளாகவோ குறிப்பிடப்பட்ட நேரடியான கூற்று ஏதுமில்லை.

இப்படி இருந்ததாக நாம் அனைவரும் பார்க்கிறோம், இது வேறு மாதிரியாக இருந்தால் சரியானதாக இல்லாதிருந்திருக்கும். ஏனெனில் உலகிற்கு பாவ நிவாரணம் இன்னும் கொடுக்கப்படவில்லை. ஒரு யூதனோ அல்லது உலகத்தில் ஒருவனோ தற்காலத்தில் தேவனை பிதா என்று அழைக்கவோ, அவரை பிதா என்று எண்ணவோ உரிமையில்லை. கிறிஸ்து மூலமாக அவரிடத்தில் உடன்படிக்கையின் உறவுக்கு வந்திருக்கிறவர்களுக்கு மட்டுமே தேவனை “எங்கள் பிதா” என்று அழைக்கக்கூடிய ஒரு உரிமையை பெற்றிருக்கிறார்கள். இந்த உறவின் மூலமாகவே அப்போஸ்தலர் யோவான், “நாம் இப்பொழுது தேவனுடைய பிள்ளைகாளக இருக்கிறோம்” என்று கூறுகிறார்.

பூரணத்துடன் தேவனுடைய குமாரர்களாக நாம் இன்னும் தேவனுடைய ராஜ்யத்தில் இல்லை. ஆனால் எதிர்காலத்தில் இமைப்பொழுதில் நாம் “மாறுதல்” அடையும் பொழுது “நாம் மாசற்ற தேவனுடைய பிள்ளைகளாகவும்” நமது ஆண்டவரைப் போலவும் இருந்து அவரது மகிமையில் பங்குபெறுவோம். ஆனால் இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாக, தேவனை எங்கள் பிதா என்று அழைக்கக்கூடிய இந்த கனத்தை, இந்த ஆசீர்வாதமான சலுகையை பெற்றவர்களாக இருக்கிறோம். ஏனெனில் நாம் அவரது பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறோம். நாம் பரிசுத்த ஆவி என்கிற இந்த பொக்கி-த்தை மண்பாண்டத்தில் பெற்று, தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். முழு அர்ப்பணிப்பின் மூலமாக கிறிஸ்துவின் சரீரத்திற்குள் வந்திருக்கிறவர்கள் விசுவாசத்தினால் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களை அவ்வாறு அழைத்துக்கொள்ளவும், அவரை தங்கள் பிதாவாக உணர்ந்து கொள்ளவும் வேதவாக்கியங்களின் சாட்சியங்கள் முழுவதும் முற்றிலுமாக தங்களை குறிப்பிடுவதாக நினைக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

### விசுவாசத்தினால் தேவனுடைய பிள்ளைகள்

ஆனால் கர்த்தர் அவர்கள் சார்பாக தேவனுடைய பிரசன்னத்தில் தம்மை பிரத்தியட்சமாகும்படி செய்து, தம்முடைய புண்ணியத்தை அவர்களுக்கு சாட்டுவதற்கு முன்பே, ஏன் இந்த வார்த்தைகளை ஆதிகால சீ-ர்களுக்கு பயன்படுத்தினார் என்பது தான் கேள்வி. அவர்கள் உண்மையிலேயே இன்னும் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழாக இருக்கவில்லையா? நாம், ஆம் என்று பதிலளிக்கிறோம். இன்னும் அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழாக இருந்தார்கள். விசுவாசத்தினால் மட்டுமே தேவனை தங்களது பிதாவானவராக அழைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் கிறிஸ்துவை வழியாகவும்,சத்தியமாகவும், ஜீவனாகவும் இயேசு, தேவனால் அனுப்பப்பட்டவர் என்றும், எதைச் செய்ய வேண்டும்

என்று வந்திருந்தாரோ அவையனைத்தையும் கடைசியில் செய்து முடிப்பார் என்றும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்கள் தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று கூறிக்கொண்டதாக நாம் காணாவிட்டாலும், தேவனை அவர்களது பிதாவாக அழைக்கும்படியாகவும் தங்களை தேவனுடைய பிள்ளைகளாக அழைத்துக் கொள்ளும் படியாகவும் தங்கள் விசுவாசத்தின் மூலமாக வெளிப்படுத்த வேண்டியவர்களாக இருந்தார்கள்.

நமது கர்த்தரின் மரணத்திற்கு சில காலத்திற்கு பிறகே அவர்கள் தங்கள் விசுவாசத்தின் மூலமாக இந்த சலுகையை பற்றிக்கொள்ள ஆரம்பித்தார்கள். யூதர்கள் தங்களை தேவனுடைய பிள்ளைகளாக அழைத்துக்கொள்ளவும் அல்லது அவரை தங்களது பிதாவாக அழைக்கவும் பயந்திருந்தார்கள். அவர்கள் தங்களை தேவனுடைய பிள்ளையாக பேசப்பட்டிருந்தால் அது அவர்கள் ஏதோ நிந்தனைக் -குரியவைகளை செய்ததாக நினைத்திருந்தார்கள். இயேசு தம்மை தேவனுடைய குமாரனாக கூறிக்கொண்ட போது அவர்கள் அவரை தெய்வ நிந்தனையாளர் என்று கூறினார்கள். (யோவான் 5:18; லூக்கா 22:70-71)

பரம பிதாவிடம் நமது மன்றாட்டு, அவருடைய தகவலுக்காக என்று நாம் நினைக்கக்கூடாது என்று நமது கர்த்தர் புத்தி கூறுவதாக அந்த தலைப்பு வசனத்திலிருந்து காண்கிறோம். நமது கர்த்தர் நடைமுறையில் கூறுகிறதாவது: "உங்கள் பிதா அறியாமையுள்ளவரல்ல, புற ஜாதிகள் தங்கள் தேவனிடம் இரந்து வேண்டுதல் செய்யும் போது, அவர்கள் தேவன் தூங்கிக்கொண்டிருப்பார் அல்லது அலட்சியமாக இருப்பார் என்று நினைத்து மகா சத்தமிட்டு மன்றாடுவார்கள். ஆனால் என்னுடைய சீ-ர்களாகிய நீங்கள் தேவனை உங்களது பரம பிதா என்று அறிந்திருக்கிறீர்கள். பூமிக்குரிய ஒரு நல்ல பிதா தன்னுடைய பிள்ளையை சிநேகித்து, அவனுக்கு தேவையானதை செய்கிறது போல, உங்கள் பரம பிதாவும் நீங்கள் அவரை நோக்கி வேண்டிக்கொள்ளுவதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்பதை அறிந்திருக்கிறார். நீங்கள் அவருக்கு சொல்லவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர் உங்களைக் காட்டிலும் அதிகமாக தெரிந்திருக்கிறார். மேலும் நீங்கள் கேட்கிறவைகளில் சில உங்களுக்கு தீமை விளைவிக்கக் கூடியவைகள் என்பதை அவர் அறிந்திருக்கிறார்."

## ஜெபத்திற்கு பதிலளிப்பதில் தெய்வீக நோக்கம்

பிறகு நாம் ஏன் அவரிடம் கேட்கிறோம்? ஏனெனில் அவர் நமது பிதாவாக இருக்கிறார். அவர் நமது அன்பான பிதாவாக இருந்து நமக்கு தேவையான, அத்தியாவசியமான அனைத்தையும் ஏற்பாடு செய்கிறார். ஜெபிப்பதற்கான நமது போதனை நமது எல்லாவிதமான ஆசீர்வாதங்களும் பரம பிதாவிடமிருந்தே வருகிறது என்று இன்னும் உணர்வதற்கான விழிப்பை ஏற்படுத்தவே என்று நாம் பதிலளிக்கிறோம். இல்லையென்றால் அவரது அன்பையும் கவனிப்பையும் தியானிப்பதின் மூலம் கிடைக்கும் ஒரு மாபெரும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை பெறமாட்டோம். மரங்கள் ஈரப்பசையை எடுத்துக் கொள்கிற அதே வழியில் நாமும் ஆசீர்வாதத்தை பெறக்கூடாது என்று அவர் விரும்புகிறார். அவர் நமது பிதாவாக இருக்கிறார் என்று கவனிக்கிற ஒரு புத்தியசாலியாக நாம் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நமது தேவைகளை அவர் அறிந்து அவைகளை ஏற்பாடு செய்கிறார். அவரது கவனிப்பு மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அனைத்திற்கும் ஏற்றாற்போல நமது விசுவாசத்தை அப்பியாசப்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

நாம் அனுதினமும் பெறுகிற மாம்சீக மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு தொடர்பான விசுவாசம் தூண்டப்படுதலை நாம் பெற வேண்டும் என்பது நமது ஜெபம் கேட்கப்படுவதற்கான தெய்வீக நோக்கமாக இருக்கிறது. கர்த்தர் உலகத்திற்கான தேவை என்ன என்பதை அறிந்து அதை அவர் பொதுவாக உலகிற்கு அளித்து வருகிறார். உலகமானது முடிவில் மானிட சுபாவத்தில் அவரது பிள்ளைகளாக திரும்பி வருவதற்கு ஒரு வழியை அவர் முன்னமே ஏற்பாடு செய்திருக்கிறார். எல்லாம் அவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி பொதுவான முறையிலும் பரந்த வழியிலும் ஏற்பாடு செய்கிறார். இயேசு மூலமாக தேவன் ஒரு மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தை வைத்திருக்கிறார். பரலோக ராஜ்யத்தில் சபை அதன் கர்த்தரோடு இருக்கும்படி உயர்த்துகிற ஒரு மாபெரும் திட்டத்தையும் வைத்திருக்கிறார். பிறகு சாபத்தை நீக்கிபோடவும், ஏதேனில் ஆதாமின் ஆரம்ப பூரணத்திற்கு மனுக்குலத்தை திரும்ப கொண்டு வருவதற்காக ஆசீர்வாதங்களை ராஜ்யமானது மனுக்குலுத்தின் மேல் பொழியும்.

இந்த நற்காரியங்களைப் பற்றி கேட்கிற காதுள்ளவர்களுக்கு கூறுவது நல்லதாக இருக்கும். இந்த தற்காலத்தில் கேட்கிறதற்கான காதுகளை உடையவர்கள் விசே-மாக போதிக்கப்பட வேண்டும். இந்த காலத்தில் தேவனுடைய கிருபையை பற்றிய அறிவு விே-சமாக அழைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே. மனுக்குலத்தில் மற்றவர்கள் அறியாமையில் இருக்கும்படி விடப்படுகிறார்கள். அவர்கள் விழித்துக்கொள்ள ஆரம்பிக்கும போது அவர்கள் கொஞ்சம் கேட்டு கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும் என்பது முற்றிலும் சரியானதாக இருக்கும். தேவனுடைய ஆழ்ந்த காரியங்களை உலகமானது காணக்கூடாததாக இருக்கிறது என்று நாம் நிச்சயப்படுத்திக்கொள்ளுகிறோம். அப்போஸ்தலர் பவுல் கூறுவது போல, "ஜென்ம சுபாவமான மனு-னே தேவனுடைய ஆவிக்குரிவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்கு பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." மேலும் அவர் கூறுகிறதாவது: "ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்." (1 கொரிந்தியர் 2: 14, 10)

## யார் ஜெபிக்கலாம்

கர்த்தர் உலகத்தோடு தொடர்பு கொள்ளவில்லை. ஏனெனில் அவர்கள் அவருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இல்லை. ஆகையால் அவர்கள் அவரை சந்தோ-ப்படுத்த முடியாது. ஆதாமில் அவர்கள் மரண தண்டனைக்குட்பட்ட போதுதான் தேவன் மனுக்குலத்தோடு கடைசியாக தொடர்பு கொண்ட காலமாகும். ஜீவனுக்கான உரிமையை அவர்கள் பெற்றிருக்கவில்லை. அவர்கள் பாவிகள், மரிக்க வேண்டும். மீறுதல் சரி பண்ணப்படுவதற்கான ஏற்பாடுகளை இன்னும் அவர் முடிக்கவில்லை. உலகத்தை மறுசீரமைப்பதற்கான புதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்காக அவர் தயாராகிக் கொண்டிருக்கிறார்.

கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கிறவர்கள் மட்டுமே இப்போது அவருடன் உறவுக்குள் இருக்கிறார்கள். "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்,

நீங்கள் கேட்டுக்கொள்ளுவது எதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்.'' கிறிஸ்துவின் உறவிலிருந்து வெளியேறினால் நமக்கு ஜெபிக்க உரிமையில்லை. இந்த உறவை நாம் பராமரித்தால், அவரது வார்த்தைகள் நம்மில் நிலைத்திருந்தால், நமது வாழ்க்கை அவரது சித்தத்திற்கு இசைவாயிருந்தால், மற்றும் நாம் அவரது சித்தத்திற்கும், அவரது வசனத்தின் ஆவிக்கும் இணக்கமாயிருந்தால், நாம் என்ன கேட்கிறோமோ அது செய்யப்படும்.

கிறிஸ்துவுக்குள் முழுமையாக நிலைத்திருப்பவர்கள் தேவனுடைய சித்தம் நிறைவேறுவதைத் தவிர வேறு எதையும் விரும்பமாட்டார்கள். அவருடைய வார்த்தைகள் அவர்களில் அதிகமாக நிலைத்திருந்தால், எதைக் கேட்பது சரியானதாக இருக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள். அந்த காலத்தில் அவரது சித்தம் என்ன என்பது தெரியாதிருந்தால், ''என்னுடைய சித்தத்தின்படியல்ல உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது'' என்று நிச்சயமாக கூறுவார்கள். ஆகையால் அவர்களது விண்ணப்பம் எதுவாக இருந்தாலும் அதைப் பெறுவார்கள். ஏனெனில் தேவனுடைய சித்தம் நிறைவேற வேண்டும் என்பதே அவர்களது விருப்பமாக இருக்கிறது.

**R 5219**

## Training for membership in the kingdom

## இராஜ்யத்தில் அங்கத்தினருக்கான பயிற்சி

''காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்.'' மத்தேயு 6:28

மலைப்பிரசங்கத்தில் ஆண்டவர் தமது சீ-ர்களுக்கு குறிப்பிட்ட முக்கியமான பாடங்களை போதிக்கிறார். உலகத்திற்கு அவர் போதிக்கவில்லை. ஆனால் அவரிடம் வந்தவர்களுக்கு, விசே-மாக போதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு, அவருடைய சீ-ர்களாக ஆக வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு போதிக்கிறார்.அவர் அவர்களுக்கு குறிப்பிட்டு சொன்னதாவது: அவர்கள் அவருடைய சீ-ர்களாக இருக்க வேண்டும் என்றால், அதிலிருந்து தேவனுடைய ராஜ்யத்தின் அங்கமாக வேண்டும் என்று நாடுவதே அவர்களது வாழ்க்கையின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். அவரே மாபெரும் ராஜாவாக இருப்பார். உலகத்திலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இந்த ராஜ்யத்தில் அவரோடு இணைந்திருப்பார்கள். தெரிந்துகொள்ளுதல் நிறைவடைந்த பிறகு அந்த ராஜ்யத்தின் கீழ் உலகத்தினர் அனைவரின் ஆசீர்வாதமும் வரும். இது ''உன் மூலமாகவும் உன் சந்ததியின் மூலமாகவும் பூமியின் வம்சங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும்'' என்று ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட வாக்குத்தத்தத்திற்கு இசைவாக இருக்கும்.

ராஜ்ய வகுப்பில் அங்கத்தினராக விரும்புகிறவர்கள் இதை உயர்ந்த நோக்கமாகவும் வாழ்க்கையின் குறிக்கோளாகவும் வைக்கவேண்டும். ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்.'' அதாவது அந்த ராஜ்யத்தில் ஒரு இடத்தை அடைவதற்கு நீதி அவசியம். இதை விரும்பி நாடுகிறவர்களுக்கு தேவையானது அனைத்தும் கொடுக்கப்படும் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. உயர்ந்த ரக ஆடைகள், நல்ல வீடுகள், சொகுசு அல்லது சுகம் ஆகியவைகளை தேவன் வாக்குத்தத்தம் பண்ணவில்லை. இவைகளெல்லாம் நமக்கு விசேஷித்த விதமாக உதவிகரமாக இருக்கும் என்று நினைக்ககூடாது.

ராஜ்யத்தில் அங்கத்தினராவதற்கு குறிப்பிட்ட பயிற்சி அவசியமாக இருக்கிறது. ஒரு இடத்தில் மாபெரும் தோட்டக்காரராகவும், இன்னொரு இடத்தில் கண்காணியாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிற தேவன் ஒவ்வொரு அங்கத்தினரையும் மேற்பார்வையிடுகிறார். சகலமும் அவர்களது நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு சோதனைகள், துன்பங்கள் மற்றும் கஷ்டங்களில் அனுபவம் தேவைபட்டால், இந்த அனுபவங்களை அவர்கள் பெறும்படி பார்த்துக்கொள்ளுகிறார். அவர்கள் பெருமையுடையவர்களாக இருந்தால், அவர்கள் அடக்கத்தை பெறுவதற்கு அனுபவங்களை பெறுவார்கள். அவர்கள் மூர்க்கமானவர்களாக இருந்தால், அவர்களை கண்ணியமுடையவர்களாக மாற்றுவதற்கான அனுபவங்களை பெறுவார்கள். இந்த அனுபவங்களையெல்லாம் பெறவேண்டியது அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது. இவைகளையெல்லாம் அவர்கள் கற்றுக் கொள்ளவில்லையென்றால் அவர்கள் எதற்கு சுதந்தரராக ஆகியிருக்கிறார்களோ, அதை அவர்களால் அடையவே முடியாது.

### வாழ்க்கையின் ஒவ்வொரு அனுபவத்திலும் பாடங்கள்

என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று தற்கால வாழ்க்கைக்கு உரியவைகளுக்காகவே பெரும்பாலான ஜனங்கள் கவலைப்படுகிறார்கள் என்கிற உண்மையை நமது ஆண்டவர் கவனித்திருக்கிறார். ஏழையான அநேக ஜனங்கள் ஆடையில்லாமலும் அடுத்த வேளை உணவு எப்பொழுது கிடைக்கும் என்பதை அறியாமலும் இருந்தததை நமது ஆண்டவர் பார்த்திருக்கிறார். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால், அவர்கள் விசுவாசத்தை அப்பியாசப்படுத்துவார்கள். இந்த துன்பங்களில் இருக்கும்படி பிதாவானவர் தமது பிள்ளைகளை அனுமதித்தால் அவர்கள் கற்றுக்கொள்ளுவதற்கான நல்ல பாடங்கள் இருப்பதை கண்டார். அந்த பாடங்களை அவர்கள் கற்றுக்கொள்ள நாடினவர்களாக இருந்தார்கள். அந்த நிலைமையைக் குறித்து எரிச்சல் அடையாதவர்களாக இருந்தார்கள்.

இதற்கு அவர்களது சீ-ர்கள், அலட்சியம் உள்ளவர்களாகவும் தங்களது தோற்றத்தைக் குறித்தோ, என்ன சாப்பிடுவோம் என்பதைக் குறித்தோ அக்கறை இல்லாதவர்களாக இருந்தார்கள் என்று பொருளல்ல. செய்ய வேண்டிய வழி இது அல்ல, ஆனால் இயற்கையின் அழகு, ஆடை முதலானவைகளை உணரும் போது, அவர்கள் பரலோக பிதாவின் மேல் விசுவாசம் உள்ளவர்களாவும், சொகுசான வாழ்க்கை அவர்களுக்கு உயர்வானது அல்ல என்பதையும் உணருகிறவர்களாகவும் இருந்தார்கள். சரியானபடி அப்பியாசப்படுத்துகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் என்பதை அறிந்து, திருப்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டியிருந்தது.

உணவுக்காகவும் ஆடைக்காகவும் ஆழ்ந்த சிந்தனை கொள்ளும் இந்த காரியம் ஏழைகளோடு நிற்கவில்லை. நடுத்தர வகுப்பார் தங்களது செல்வத்தை பெருக்கி, இந்த நேரத்தில் எதை உடுத்துவேன், அந்த நேரத்தில் எதை உடுத்துவேன் முதலானவைகளை கூறிக்கொண்டு, உண்ணுதல், குடித்தல் மற்றும் அணிதல் போன்ற இந்த வாழ்க்கைக்குரியவைளுக்காக அக்கறை கொள்வதில் முழ்கிவிடுகிறார்கள். உண்ணுதல், குடித்தல் மற்றும் அணிதல் போன்றவைகள் ஏழை மற்றும் பணக்காரர்களின் எண்ணத்தை முழ்கடிக்கும் பிரயாசங்களாக இருக்கின்றன.

கர்த்தருடைய பிள்ளைகள் தாங்கள் பெற்றிருக்கிறவைகளோடு திருப்தியடைய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தேட வேண்டியவைகள் நேர்மை மற்றும் கண்ணியம் ஆகும். ஆனால் நேர்மையும் கண்ணியமும் கட்டுக்கடங்காததல்ல. கர்த்தரின் பிள்ளைகள் சுய சந்தோ-த்துக்காக பணத்தை செலவு பண்ணக்கூடாது. அவர்களைச் சுற்றிலுமுள்ள மற்ற தேவனுடைய பிள்ளைகளை பார்ப்பதினால், பெரும்பாலான ஆசீர்வாதங்களை அவர்களே எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர்களது பணத்தை சிக்கனமாக செலவு பண்ண வேண்டும். உக்கிராணத்துவத்தின் ஒரு பகுதியாக அவர்களது பணத்தை செலவு பண்ண வேண்டும். அவர்கள் அதற்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்பதை அறிய வேண்டும்.

நாம் முதன் முதலில் ராஜ்யத்துக்குரியவைகளில் அக்கறை செலுத்த வேண்டும். ராஜ்ய ஊழியத்திற்கு பணம் தேவைப்படும் போது, கர்த்தரின் அர்ப்பணம் பண்ணப்பட்ட பணத்தை சுய சந்தோ-த்துக்காக செலவு செய்தால் குற்றவாளியாக உணர்வோம். இது தான், கர்த்தர் ராஜ்யத்தின் அனுகூலத்தை பாதி ஏழ்மையில் விட்டிருப்பதற்கு மறைமுகமான காரணமாக இருக்கிறது. அந்த ராஜ்யத்தின் அனுகூலத்திற்காகவும் இப்படி செய்கிறார். நமது தேவன் மிகவும் செல்வந்தர். பொன் மற்றும் வெள்ளி அனைத்தும் அவருடையது. மலைகளில் இருக்கும் ஆடு மாடுகள் அனைத்தும் அவருடையது. ராஜ்ய வகுப்பாரின் அனுகூலத்திற்கு அவற்றை அனுப்பி அபரிமிதமான பணத்தை கொடுப்பார். சிக்கனத்தை கடைபிடிக்கவும், தற்கால ஆசீர்வாதங்களை மறுக்கும் சந்தர்ப்பத்தை கொடுக்கவும் ராஜ்ய அனுகூலத்திற்காகவும் அவைகள் அப்படியே விடப்பட்டிருக்கின்றன.

### காட்டு புஷ்பத்தின் மூலமாக கற்றுக் கொண்ட பாடங்கள்

இதில் காட்டு புஷ்பத்தின் மூலம் கருத்தை விளக்கும் விதமாக நமது தலைப்பு வசனம் உள்ளே வருகிறது. அந்த புஷ்பங்கள் வளர தேவையான சத்துக்கள் மண்ணிலிருந்தே கிடைக்கிறது. நமது கர்த்தர், தோட்டக்கலை நிபுணரும், வெப்ப (தாவர) வீடும் தேவைப்படுகின்ற தாவரத்தை எடுக்காதபடி, காட்டுப் புஷ்பத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார். அந்த புஷ்பம் இந்த நிலைமைகளின் கீழ் வளர்கிறது. ஏனெனில் அதன் மாபெரும் பாதுகாவலர் அதன் அனுகூலத்திற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்.

இது உபயோகமற்ற தாவரத்தை அர்த்தப்படுத்தவில்லை. ஏனெனில் அது உபயோகமற்றதாக இருந்தால், அது இறந்துவிடும். கிழங்கு சத்துக்களை அதன் தண்டுக்கு தொடர்ந்து அனுப்பி கொண்டேயிருக்கிறது. அது எந்த விதத்திலும் உபயோக மற்றதல்ல. இதை அந்த தாவரம் கவலைப்படுகிறதினால் செய்கிறதா? இல்லை. அதற்கு வரும் சந்தர்ப்பங்களை பயன்படுத்த மட்டும் செய்கிறது. இதன் இயற்கையான சட்டங்களின் வேலைகளை மட்டுமே அப்பியசப்படுத்துகிறது.

காட்டு புஷ்பத்திற்கு தேவையானவகளை அதன் சொந்த மண்ணிலேயே தேவன் வைத்திருக்கிறார். அதன் அழகில் அது வளரும்போது, ''சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போல உடுத்தியிருந்ததில்லை.'' தேவனுடைய பிள்ளைகளுக்கும் அதைப் போலவே இருக்கும். பிதாவானவர் நம்மை அவரது பிள்ளைகளாக ஜெனிப்பித்து, தற்கால நிலைமையின் கீழ் நம்மை வைத்திருக்கும் பொழுது, அப்படி நம்மை வைத்த அவர் நமக்கு தேவையான ஏற்பாடுகளை செய்கிறார் என்று நிச்சயிக்கிறோம்; அவர் ஞான மற்றவர் அல்ல என்றும், நம்மை சாதகமற்ற நிலைமையில் வைக்க மாட்டார் என்றும் நிச்சயிக்கிறோம். அவைகள் அனைத்தும் தெய்வீக ஏற்பாடுகள்.

இநத நிலைமைகளிலிருந்து நாமே விலகிக் கொண்டால், ஓரளவுக்கு நாமே பொறுப்பாகிறோம். நமது சொந்த சித்தத்தை அப்பியாசப்படுத்தாமல், இவரது தெய்வீக கிருபையில் இருக்கும் வரை, சகலமும் நமது நன்மைக்கேதுவாய் நடக்கும்படி எல்லாவற்றையும் அவர் ஒதுக்கி தள்ளுவார் என்று நிச்சயத்திருக்கலாம். பிறகு, பரிசுத்த ஆவியின் சகல கிருபைகளினாலும் நம்மை அலங்கரித்துக் கொள்ள நாம் நாடினால், நாம் உடனே பறறிக்கொள்ள கூடிய சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்திக் கொண்டால், நமது அபிவிருத்திக்கான உபாயங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளுவோம்.

காட்டு புஷ்பம், தனது ஊட்டச் சத்திற்காக தனது சக்திக்கு உட்பட்ட எதையும் செய்ய அதற்கு உரிமை இருக்கிறது. அதை போல, நம்மில் நற்கிரியைகளைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று அறிந்து, நமது ஆவிக்குரிய ஊட்டச் சத்திற்காகவும், நமது குணலட்சணங்களை அழகுபடுத்துவதற்காகவும், நமது சக்திக்குட்பட்ட அனைத்தையும் பயன்படுத்துவது நமது உரிமையும் கடமையுமாக இருக்கிறது.

### தெய்வீக குணலட்சணத்தை ஆழ்ந்து சிந்திப்பது உதவிகரமானது

இப்படிப்பட்ட சாதாரண காரியங்களை எப்படி ஆராய்ந்து கவனிப்பது என்பதில் நமது கர்த்தர் நமது கவனத்தை ஈர்க்கிறார். வாழ்க்கையின் அனைத்து காரியங்களோடு தொடர்புள்ள பாடங்களை கற்றுக்கொள்வது உதவிகரமானது. சிருஷ்டிகரின் மேல் உள்ள விசுவாசத்தின் சரியான கோணத்திலிருந்து ஆராய்ச்சி செய்ய அணுக வேண்டும். உன்னதமானவரின் உருவகமாகவும், பிரதிநிதியாகவும் அவர் இருப்பதாக உணர்ந்து, மிகவும் உயர்ந்த குணங்களாகிய நீதியில் பரிபூரணம், ஞானத்தில் பரிபூரணம், வல்லமையில் பரிபூரணம், அன்பில் பரிபூரணம் ஆகியவைகளை மனித மனதில் எண்ணங்கொள்ள வேண்டும்.

இப்படியாக கருதுகிற இருதயம், முன்னேற்றம் அடைகிறது, கிருபையிலும், அறிவிலும் அன்பிலும் வளருகிறது. சிறு காரியங்களை கவனிக்க தவறுகிற இருதயம் தேவனைப் பற்றிய சரியான எண்ணங்கொள்ளுதல் அவருடைய திட்டங்கள் பற்றி சரியாக உணர்ந்து கொள்ளுதல்,அவரது குணலட்சணங்களை சரியானபடி உணர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றிலிருந்து தவறுகிறது.

R5220

## The New Creature's Struggle for Existence

## வாழ்வதற்கான புது சிருஷ்டியின் போராட்டம்

''மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன்.'' 1கொரிந்தியர் 9:27

கிறிஸ்தவர்களிடம் இரட்டைத் தன்மை உள்ளதை மற்றவர்களால் கண்டுணர முடியாது. சுபாவ மனிதனுக்கு தனது சரீரத்தை தவிர தனிப்பொருள் எதுவும் கிடையாது. ஆனால் புது சிருஷ்டிக்கு சரீரத்திலிருந்து வேறுபட்ட ஒரு வாழ்க்கையும் தனிப் பொருளும் இருப்பதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த புது சிருஷ்டியானது தற்காலிகமாக பழைய சரீரத்தில் போஷிக்கப்பட்டு, அபிவிருத்தி பண்ணப்படுகிறது. பழைய சரீரம் அதன சித்தத்தையும விருப்பத்தையும் கொண்டுள்ளது. இதன் விளைவாக அவைகளுக்குள்ளே முரண்பாடு இருக்கிறது.

இந்த வசனத்தின் கடைசி பகுதியாகிய, ''என் சரீரத்தை

கீழ்ப்படுத்துகிறேன்'' என்பது ஆதிக்கம் உடையதாக நாம் காண்கிறோம். பழைய சிருஷ்டியானது புது சிருஷ்டியை கீழே தள்ளி கழுத்தை நெறிக்குமோ என்ற பயம் இருக்கிறபடியால் புது சிருஷ்டியானது இப்படியாகச் சொல்ல வேண்டும்: "நான் தான் எஜமான். எனது சரீரம் என்னை அடக்கி ஆள நான் அனுமதிக்க மாட்டேன்.'' எது வெற்றிகொள்ளும், எது அழியாதபடிக்கு ஜீவிக்கும் என்று தீர்மானிப்பதில் ஒரு போராட்டமாக இது இருக்கும்.

புது சிருஷ்டி முதலாவது செய்ய வேண்டியது, சரீரத்தை கீழ்ப்படுத்தி இப்படியாக ஆளுகை செய்ய வேண்டும், புது சிருஷ்டி இந்த ஆளுகையை பெற்ற பிறகு இரண்டாவது செய்ய வேண்டியது, பழைய சுபாவத்தை கீழ்ப்படுத்தி அதன் உத்தரவுக்கு கீழ்ப்படியாதிருப்பது. பழைய சுபாவம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருக்கும். இது அடிக்கடி தன்னை எப்படி நடத்த வேண்டும் அல்லது எப்படி நடத்தக்கூடாது என்று வாதாடிக் கொண்டே இருக்கும். சில சமயங்களில் தவறாக தயவினால் இது மிகவும் சிறப்பாக நடத்தப்படும். பழைய சிருஷ்டியின் வாழ்வு என்பது புது சிருஷ்டியின் மரணம் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். நாம் மாம்சத்தை மறைந்து போகப் பண்ண வேண்டும். மாம்சம் முற்றிலுமாக அழியும் வரை நாம் வெற்றிக் கொள்ள முடியாது. பழைய சிருஷ்டி மரிக்கும் வரை புது சிருஷ்டியாக நாம் ஜெயம் கொள்ள முடியாது. ஆகையால் போராட்டம் மரணம் வரை இருக்கும். இரண்டு சுபாவங்களுக்கும் இடையே அனுதாபம் இருக்கக்கூடாது.

உயிர்ப்பித்தாலும், ஊக்குவித்தாலும் மாம்சமானது எந்த விதத்திலும் சத்துருவாக இருக்கிறது. அது நமது இருதயத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். இது சில காரியங்களில் நமது நடத்தையை தீவிரப்படுத்த வழிநடத்தும். நாம் தீவிரவாதிகளாக உலகத்தால் தீர்மானிக்கபடுவோம். ஆனால் உலகம் நமது நியாயதிபதி அல்ல. உலகமானது, "அவர்களுக்காக மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை'' பெற்றிருக்கவில்லை. அவர்கள் முற்றிலுமாக நம்மிலிருந்து வேறுபட்ட வகுப்பார். நாம் அவர்களிடமிருந்து புத்திமதி பெறவோ, காரியங்களில் நமது கருத்தை உருவாக்க அவர்களை அனுமதிக்கவோ கூடாது. எல்லா காரியங்களிலும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே பயன்படுத்த வேண்டும்.

### மாம்சீக மரணம் அத்தியாவசியமானது

நாம் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாகி அவரோடு பாடு படவேண்டும். நமது சிலுவையை எடுத்துக்கொண்டு அவரை பின்பற்ற வேண்டும் என்று நமது ஆண்டவர் அழைக்கிறார். இது மாம்சத்தை முற்றிலுமாக கீழ்ப்படுத்துவதை - மாம்சத்தின் மரணத்தை அர்த்தப்படுத்துகிறது. நம் மாம்சத்தை வெற்றி கொள்ள தவறினால், மாபெரும் பரிசை பெறுவதில் தவறிவிடுவோம். பரம அழைப்பின் பந்தயப் பொருளை பெறுபவர்கள், மாம்சத்தை சிலுவையிலறைந்து அதை மரணத்திற்கு ஒப்புக் கொடுப்பார்கள். நாம் "முற்றும் ஜெயங்கொண்டவர்களாக'' இருக்க வேண்டும்.

இந்த பொருளில் தான் அப்போஸ்தலர் கூறுகிறார்: மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதாவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். மற்றவர்களுக்கு போதிக்கிறவைகள் அனைத்தும் என்னை ராஜ்யத்துக்கு கொண்டு போகாது. சகல விடா முயற்சியையும் பயன்படுத்தி நான் எனது சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்த வேண்டும். நான் வெளியேறுவது எதுவாக இருந்தாலும் அதற்கு நான் அதிக சலுகை காட்டினாலும் அது எனக்கு எந்த வகையிலும் சேதமாகவே இருக்கும். நான் ஆகாதவனாய் போகாதபடிக்கு வெற்றியை நிறைவேற்றவே நான் கவனமாய் இருக்க வேண்டும்.

### புது சித்தத்தின் அறிவு நிபந்தனைக்கு உட்பட்டது

சபையானது தேவனுடைய ஒரு புது சிருஷ்டி என்று அப்போஸ்தலர் வேறு இடத்தில் நமக்கு சொல்லியிருக்கிறார். மேலும் அவர், பரிசுத்த ஆவியினால் மறுபடியும் ஜெனிப்பிக்கப் -பட்டவர்களிடம் பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின என்றும் கூறியிருக்கிறார். (2 கொரிந்தியர் 5;17) அதே வகுப்பாரை நோக்கி அவர் கூறுகிறாதவது: "உங்கள் பழைய மனிதனுடைய செய்கைகளை களைந்து போட்டிருக்கிறீர்கள்.'' நாம் ஆதாமின் வழியில் வந்த விழுந்து போன மனிதனை, சுபாவ மனிதனை, பழைய மனிதனை களைந்து போட்டிருக்கிறோம். இதே பொருளில் நாம் பழைய சித்தத்தை களைந்து போட்டு, கிறிஸ்துவில் ஒரு புது சித்தத்தை பெற்றிருக்கிறோம். ஆகையால் நாம் மனித குடும்பத்திலிருப்பதற்கு பதிலாக கிறிஸ்துவின் சரீர அங்கத்திற்குள்ளாக, பழைய மனிதனிலிருந்து புது மனிதனுக்குள்ளாக நாம் நுழைந்து இருக்கிறோம்.

கிறிஸ்துவின் சரீரம் மனிதத்தன்மையுடையது அல்ல, ஆனால் ஆவிக்குரியது. நாம் ஒரு குடும்பத்திலிருந்து அதன் நம்பிக்கை மற்றும் உரிமைகளிலிருந்து மற்றதுக்கு மாற்றம் செய்திருக்கிறோம். பழைய மனு-ன் ஒவ்வொரு வழியிலும் விழுந்துபோன மற்றும் பாழான நிலைமையில் இருக்கிறான். அவனது செய்கைகள் நமக்கே திருப்தியில்லாமலும் இன்னும் விசே-மாக தேவனுடைய பார்வையில் திருப்தியில்லாமலும் இருக்கின்றன. ஆகையால் நமது சித்தத்தின் மூலம் இந்த நிலைமையிலிருந்து, உன்னதத்திலிருந்து வருகிற வழிகாட்டுதலின் கீழ் வெளியேறியிருக்கிறோம். நாம் புதிய மனிதனாக, கிறிஸ்துவாக இருப்பதற்கு பழைய சுபாவத்தில் நாம் பெற்றிருந்த சகல பழைய உரிமைகளையும் விருப்பங்களையும் முழுமையாக அர்ப்பணித்திருக்கிறோம்.

இயேசு தலையாக இருக்கிற கிறிஸ்து என்கிற புதிய மனு-னுக்குள் நாம் அங்கமாக வந்திருக்கிறபடியால், இந்த தலையானவருக்கு கீழ் அறிவு பெருக்கத்தில் நாம் இருக்கிறோம். "தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனு-னை தரித்துக் கொண்டிருக்கிறோம்.'' பரிசுத்த ஆவியினால் இயக்கப்படுதல் மற்றும் மானிட சித்தத்தை விட்டுவிடுகிறதற்கேற்ப புது சிருஷ்டியானது, புதிய சித்தத்தின் தெளிவான அறிவிற்கு அதிகமாக வருகிறது.

கிறிஸ்துவை தரித்துக் கொள்வதற்காகவும் அவரது சரீரத்தில் அங்கங்களாக காணப்படவும், மகா மேன்மையான மகிமையை அவரோடு கூட ஒரு பங்கை பெறும்படியாகவும் முடிவாக தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு இடத்திற்கு பாத்திரராகும் படியாகவும், நாம் பழைய மனிதன் ஆதாமையும் பொதுவான மனித சுபாவத்தையும் களைந்து போடும்படி இது காணப்படுகிறது. நாம் கிருபையிலும் அறிவிலும் வளருவதற்குத்தக்கதாக பரலோக காரியங்களை நாம் உணர்ந்து கொள்ளுதல் அதிகரிக்கிறது. இப்படியாக நமது புதுப்பித்தல் முன்னேறுகிறது.

பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலில் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட புது சித்தம் தான் புது சிருஷ்டி. இப்படியாக இது பழைய மனு-னை களைந்து போட்டு புதிய மனு-னை அணிந்து கொள்ளுகிறது. புது சிருஷ்டியின் வாழ்வு இந்த மாற்றத்தை பொருத்தே இருக்கிறது. அதில் தோல்வி என்றால் இரண்டாம்

மரணம் தான். தேவைக்கும் குறைவான வெற்றி என்றால் ஆவிக்குரிய தளத்தில் ஒரு தாழ்மையான இடம் திரள் கூட்டத்தில் கிடைக்கும். "முற்றும் ஜெயங்கொண்டவர்கள்" மட்டுமே கர்த்தருக்கு உடன் சுதந்தரத்தையும், மகா மேன்மையான மகிமையையும் தெய்வீக சுபாவத்தையும் பெறுவார்கள்.

R5221

## Cross - bearing a Privilege
## சிலுவை சுமத்தல் ஒரு சலுகை

"அவர்கள் இயேசுவை கொண்டு போகிற போது... சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்து கொண்டு வரும்படி அதை அவன் மேல் வைத்தார்கள்." லூக்கா 23:26

இந்த வேத வசனம் நமது ஆண்டவர் அடைந்த அவமானம் மற்றும் இழிவின் முழு காட்சியையும் நமது மனதிற்கு முன்னே கொண்டு வருகிறது. இது அவரது சொந்த தேசத்தின் மனிதர்கள் – பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களின் வேண்டுகோளின்படி ரோம கவர்னரால் கொடுக்கப்பட்ட தண்டனை. பிலாத்து விருப்பம் இல்லாமல், யூத ஜனங்கள் கொடுத்த அழுத்தத்தினால் இந்த தண்டனையை கொடுத்தான். அவனால் நியமிக்கப்பட்ட நூற்றுக்கதிபதியும் அவனது போர் சேவகர்களும் இயேசுவை கொண்டு சென்றார்கள். இயேசுவை பிலாத்து, குற்றவாளி என்று தீர்க்காவிட்டால், ரோம அரசுக்கு விரோதமாக வேலை செய்வதாக அவனைக் குறித்த அவர்கள் பிராது கொடுப்பதாக பிரதான ஆசாரியர்கள் பயமுறுத்தியிருந்தார்கள். ரோம சக்ரவர்த்தியின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிக்கு, தான் ராஜா என்று அடக்கமுள்ள நசரேயன் கூறிக்கொள்ள அனுமதித்த அவனை (பிலாத்துவை) ரோம சக்கரவர்த்தி எப்படி நடத்துவான்?

யூத சனகரின் ஒரு வித்தியாசமான குற்றச்சாட்டின் கீழ் கர்த்தரை நியாயம் விசாரித்ததை நாம் நினைவு கூருகிறோம். அவருக்கு விரோதமான அவர்களது குற்றசாட்டு தெய்வ நிந்தனை (தேவ தூ-ணம்). நியாயப்பிரமாணச் சட்டப்படி அதற்கு தண்டனை கல்லெறிந்து கொல்லுதல். அந்த சமயத்தில் கல்லெறிதலை செய்ய அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஒரு வேளை அவர்கள் ஜனங்களுக்கு பயந்திருக்கலாம்.

நமது கர்த்தர் கல்லெறியப்பட வேண்டும் என்பது தெய்வீக திட்டமல்ல. அவர் சபிக்கப்பட்டவராக கருதப்பட்டு மரத்தில் தூக்கிப் போடப்பட வேண்டும் என்பதே தெய்வீக திட்டம். (உபாகமம் 21: 22, 23) "சர்ப்பமானது மோசேயினால் வனாந்திரத்திலே உயர்த்தப்பட்டது போல, மனு- குமாரனும் உயர்த்தப்பட வேண்டும்." (யோவான் 3: 14, 15) திரளான ஜனங்களுக்கு பயந்ததினால் அல்லது ரோம கவர்னரிடமிருந்து உத்தரவு கிடைக்காததினால் யூதர்கள் இயேசுவை கல்லெறிய வில்லை.

ரோம நீதிமன்றத்திற்கு முன்னால் தெய்வ நிந்தனை என்கிற குற்றச்சாட்டை கொண்டு வர முடியாததினால், ஒரு வித்தியாசமான குற்றச்சாட்டை கொண்டு வந்தார்கள். அதாவது ரோம சக்கரவர்த்திக்கு அவர்கள் விசுவாசமாக இருந்த பொழுது, இயேசு ரோம அதிகாரத்துக்கு துரோகியாக இருந்தார் என்பதாகும். பிலாத்து இந்த காரியத்தில் தன் கைகளை கழுவினான். இந்த பழியிலிருந்து விடுபட விரும்பினான். யூதர்களிடமிருந்து வந்த அழுத்தத்தினாலும் அமைதியை நிலை நாட்ட விரும்பினதினாலும், நமது கர்த்தர் தம்மை யூத ராஜா என்று கூறிக்கொண்டதால் அவரை சிலுவையிலறைய உத்தரவிட்டான்.

இயேசு கல்வாரிக்கு போகும் வழியில் தமது சிலுவையை சுமந்தார் என்பதையும் அதன் சுமை தாங்காமல் அதன் கீழாக விழுந்தார் என்பதையும் இந்த விவரமானது குறிப்பிடுவதாக காணப்படுகிறது. இதற்கு அநேக காரணங்கள் இருந்திருக்கலாம். அவர் மன மற்றும் சரீர வேதனையிலும் பலவீனத்திலும் இருந்தார். கெத்செமனேயில் இரத்த வேர்வையில் வேதனையை அடைந்தார். அவர் சனகரின், பிலாத்து, ஏரோது போன்றவர்களின் முன்பாக நியாய விசாரணைகளை சகித்திருந்தார். இதற்கு பின்பு அவர் சாட்டையால் அடிக்கப்பட்டார். இவ்வளவு பாடுகளை பட்ட ஒருவர் நடக்கக்கூட முடியாதவராக இருந்திருக்கவேண்டும். அவரோ இந்த பார சிலுவையை சுமந்தார்.

### சிலுவையின் தோராயமான எடை

ஒரு பரிபூரண மனிதனாக நமது ஆண்டவரை நினைக்கும் போது, அவரை ஒரு பலமுள்ள மனிதாக நினைக்கக்கூடாது. நமது இனத்தில் அபூரணம் அவர்களாலேயே பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நமது இனத்தின் முதல் மனிதனாகிய ஆதாம் மிதமிஞ்சிய பலமுடையவராக இருந்தார் என்று யூகிப்பதற்கு எந்த வித காரணமும் இல்லை. அப்படியிருந்திருந்தால் அது முரட்டுதனத்தை குறித்திருக்கும். இந்த கொள்கை பழங்களிலும் காய்கறிகளிலும் காணப்படுகிறது. நாம் அதிகமாக விளைந்த ஆப்பிளை பார்க்கும் போது, அது சாதாரண ஆப்பிளைப் போல மிருதுவாக இராது. இதே போல மனிதரிலும் அதிகமாக வளர்ந்தால், இராட்சதனைப் போல இருந்தால் அவன் மிகவும் முரடனாக இருப்பான். நாம் நமது ஆண்டவரை முரட்டுத்தனமுள்ளவராகவோ அல்லது பலவீனமுள்ளவராகவோ கருதக்கூடாது. ஆனால் உயர்ந்த பண்புடையவராக, தகுதியான பலமும் சரீரமும் உடையவராக இருந்தார் என்று கருத வேண்டும்.

நாம் சிலுவையைப் பற்றி நினைக்கும் போது, அது லேசானதாக இருக்கும் என்று கருத முடியாது. எருசலேமின் அருகாமையில் உள்ள மரங்களெல்லாம் லேசான கனமுள்ளதல்ல. மிகவும் கனமானது. சாதாரணமாக ஒலிவ மரம் தான் அங்கே அதிகமாக இருந்தது. அது மிகவும் கனமானதாகவும் அடர்த்தி மிகுந்ததாகவும் இருக்கும். சிலுவையானது, பூமிக்கு கீழே மூன்று அடியும் மேலே தேவையான உயரமும் இருந்திருக்கும். அதாவது பன்னிரண்டிலிருந்து பதினான்கு அடி உயரமுள்ளதாகவும் குறுக்கு மரம் குறைந்த பட்சம் ஐந்து அடியாகவும் இருந்திருக்கும். அதன் தடிமன் வளையக்கூடாததாகவும், சுமையை தாங்கக் கூடியதாகவும் இருந்திருக்கும். ஆகையால் அதன் கனம் நூற்றைம்பதிலிருந்து இருநூறு பவுண்டுகளாக இருக்கும் என்று நாம் யூகிக்கலாம். இதையெல்லாம் பார்க்கும் போது அது லேசானதாக இருந்திருக்க முடியாது.

### இந்த சம்பவத்திலிருந்து பாடங்கள்

கர்த்தர் பாரச்சிலுவையின் கீழாக விழுந்தார் என்ற இந்த பாரம்பரிய செய்தியினால் நாம் அதிகமாக அனுதாபம் கொள்ள காரணமிருக்கிறது. இந்த சமயத்தில்தான், பலமும் முரட்டுத்தனமுள்ள, நாட்டிலிருந்து வருகிற சீரேனே ஊரானாகிய சீமோன் என்பவனை நூற்றுக்கதிபதியும் அவனது சேவகர்களும் பிடித்து நிறுத்தி சிலுவையை சுமப்பதில் இயேசுவுக்கு உதவும்படி பலவந்தப்படுத்தினார்கள். இருந்தும் சிலுவையின் பாரம் முழுவதும் இயேசுவின் மேலேயே இருந்தது.

இந்த சம்பவத்தில் நமக்கு பாடங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று, இயேசுவின் விசுவாசமுள்ள பதினோறு சீ-ர்கள் இந்த

சிலுவை சுமக்கும் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டார்கள். முதலாவது அவர்களை கண்டனம் பண்ண வேண்டும். எனினும் அவர்கள் உயிருக்கு பயந்தார்கள் என்பதை சிந்திக்க வேண்டும். அவர்கள் மேல் நாம் பரிதாபம் கொள்ளுகிறோம். அதே சமயம் ஆண்டவரோடு இணைந்த ஒவ்வொன்றிலும் அதிகமான தைரியம் வேண்டும் என்கிற ஒரு பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும்.

கர்த்தருக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்று திரளான ஜனங்கள் கூச்சலிட்டது போல சீ-ர்களின் மரணத்திற்காகவும் கூச்சலிட ஆவலாய் இருந்தார்கள் என்பது உண்மை. ஆனால் அவர்களில் ஒருவர் கர்த்தருக்காக மரிக்கவும் தயார் என்று சொல்லியிருந்தார். மற்றவர்களும் அதே போல் சொன்னார்கள். சோதனை நேரத்தில் அவர்கள் தைரியத்தை வெளிப்படுத்தாதிருந்தது எப்படி விநோதமாக இருக்கிறது! சோதனை வரும் போது விசுவாசத்தை வெளிப்படுத்திக் காண்பிப்பதைக் காட்டிலும் இதை வாயினால் சொல்லுவது சுலபமானது. உகந்த நேரத்தில், துன்பங்கள், பயங்கரமான காட்சிகள் மற்றும் சப்தங்கள் பயங்கரத்துடன் வரும்.

இப்படிப்பட்ட காரியம் எதையும் ஆண்டவருக்கு செய்ய நமக்கு நிச்சயமாக சந்தர்ப்பம் இல்லை. ஆனால் அவர் இன்னும் சகோதர்களுக்குள் நம்முடன் இருக்கிறார் என்று நாம் உணருகிறோம். ஆண்டவரின் சிலுவையை சுமக்க உதவுவதற்கு இன்னும் நமக்கு என்ன ஒரு மேன்மையான சலுகை வழங்கப்படுகிறது! அவரது சகோதரரில் சிறியவனுக்கு செய்யப்படுவதை அவருக்கே செய்வதாக அவர் அங்கீகரிக்கிறார் என்று அறிவது எவ்வளவு அனுகூலமானது!

### முடி சூடுதலுக்கு முன்னானது சிலுவை சுமத்தல்

இதோடு இணைந்த இன்னொரு கருத்தை நாம் அங்கே பெறுகிறோம். சீமோன் சிலுவை சுமக்கும் அவசியத்தை, சுமையை விருப்பத்துடனோ, விருப்பமில்லாமலோ பெறுகிறான். ஆனால் அவனது அனுபவங்கள் எப்படிப்பட்டது என்பது குறித்து நமக்கு பதிவுகள் இல்லை. ஆனால் அதன் பிறகு அவன் ஆண்டவரின் சீ - னானான் என்று பாரம்பரிய செய்திகள் நமக்கு அறிவிக்கின்றன. ஆகையால் கர்த்தரின் கிருபையால் சில சமயங்களில் பொறுப்புகள் நம்மேல் வைக்கப்படுகின்றன. கர்த்தர் நம்மேல் சிலுவையை வைத்தால் அதை சந்தோ-த்துடன் சுமப்போமா அல்லது முறுமுறுப்போமா? நாம் சிலுவையை நாடிச் செல்லாமல் இருந்தும், அது நம்மேல் பலவந்தமாக வைக்கப்பட்டாலும் அதை சந்தோ-த்துடன் சுமந்தால் நாம் ஒரு ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

சோதனைகளும் துன்பங்களும் வரும்போது சிலுவைகள் நம்மேல் சுமத்தப்படும் போது, அது முடி சூடுதலுக்கு நெருக்கமானது என்பதை உணர்ந்து, சிலுவை சுமக்கும் சந்தர்ப்பத்தை மெச்சினால் சந்தோ-ம் நம்முடையது. இந்த நிகழ்ச்சியில் சீமோன், அவனது அடிச்சுவட்டில் நடந்து அவனது முன்மாதிரியை பின்பற்றி சிலுவை சுமக்க உதவுகிற கர்த்தரின் சகல விசுவாசிகளையும் குறித்துக் காட்டுகிறான். சிலுவை நமக்கு மிகவும் பாரமாக இருக்காது, கர்த்தர் கனமான பகுதியை சுமப்பார். எல்லாம் நமது நன்மைக்கு ஏதுவாகவும் ஆசீர்வாதத்திற்கு ஏதுவாகவுமே நடக்கும் என்பதே நமது அனுபவங்களாக இருக்கும்.

R5222

## Re Christ's Resurrection
## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

"கிறிஸ்து மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்." 1 பேதுரு 3:18

நமது கர்த்தர் உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எழுந்தருளும் வரை நாற்பது நாட்கள் அவரது சீ-ர்களோடு கூட இருந்தார். அவர் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார். எனினும் பதிவுகளின்படி பதினோறு தடவைக்குமேல் தம்மை வெளிப்படுத்தவில்லை. அதிலும் அதில் சில நிகழ்வுகள் மறுபடியும் சொல்லப்பட்டதாக இருக்கலாம். ஒவ்வொரு காட்சியிலும் சீ-ர்களோடு அவர் இருந்தது சில நிமிடங்கள் மட்டுமே. எம்மாவூருக்கு போகும் போது மட்டுமே அதிக நேரம் இருந்தார். மாபெரும் மாறுதல் அவரிடம் ஏற்பட்டிருந்ததால் இந்த வெளிப்படுத்துதல்களில் எல்லாம் அவரது குரல் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப இடி முழக்க சத்தத்தைப் போல இருந்தது. முந்தி இருந்ததைப் போல் அதே அன்புடையவராக இருந்த போதிலும் இனி அவர் அதே ஜீவி அல்ல. இயேசு இனி மாம்சீக ஜீவியாக இல்லாதிருந்தாலும், இன்னும் அவர் அவர்களது கர்த்தராக, ஆண்டவராக, அதே இயேசுவாக இருக்கிறார். அவர் இப்பொழுது "கர்த்தரே ஆவியானவராக," "உயிர்ப்பிக்கிற ஆவியாக" இருந்தார்.

இயேசு, மாம்சத்தில் எழுந்ததாக வேத வாக்கியங்களில் எந்தவித அறிக்கையும் இல்லை. நாம் வேத வாக்கியங்களை மிகவும் ஜாக்கிரதையாக ஆராய்ந்தோம். அதில் எதிலுமே அவர் மாம்சத்தில் உயிர்த்தெழுந்ததாக காணப்படவில்லை. மாறாக அப்போஸ்தலர் அறிவிப்பதாவது: "கர்த்தரே ஆவியானவர்." (2 கொரிந்தியர் 3:17) பரிசுத்த பவுல், கர்த்தரை அவர் எப்படி பார்த்தார் என்று கூறுகிறார். அவரை மாம்சத்தில் பார்க்கவில்லை. ஆனால், "மத்தியான வேளையிலும் சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி பிரகாசித்தது." (அப்போஸ்தலர் 26: 13-15)

சபையானது ஒரு ஆவிக்குரிய சரீரமாக ஆக வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்குச் சொல்லுகிறார்: "அழிவுள்ளதாக விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும், கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்." (1 கொரிந்தியர் 15: 42-44) உயிர்த்தெழுதலில் நமது அனுபவங்கள் நமது கர்த்தருடையதைப் போலவே இருக்க வேண்டும் என்று அவர் நமக்கு சொல்லுகிறார். நமது கர்த்தருடைய வி-யத்தில் கனவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டு மகிமையுள்ளதாய் எழுந்திருந்தது. ஜென்ம சரீரம் விதைக்கப்பட்டு ஆவிக்குரிய சரீரம் எழுந்திருந்தது. பரிசுத்த பேதுரு இந்த உண்மையில் நமது கவனத்தை இழுக்கிறார். அவர் கூறுகிறதாவது: "கிறிஸ்து மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்." (1 பேதுரு 3:18)

கர்த்தர் எப்படி ஆவியின் சரீரத்தில் உயிர்ப்பிக்கப்பட்டார் என்ற கேள்வி எழுகிறது. அதற்கு பதிலாக நமது கர்த்தருடைய வசனத்தை மட்டுமே உங்களுக்கு கொடுக்க முடியும். அப்படியாக அவர் எழுப்பப்பட்டார். நமது ஆண்டவரின் ஞானஸ்நானத்தில் அவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட போது புதிய சுபாவம் ஆரம்பித்து, உயிர்த்தெழுதலில் ஒரு ஆவியின் ஜீவியாக பூரணமடைந்த போது நிறைவடைந்தது.

இயேசு மாம்ச சரீரத்தில் தரிசனமானார் என்று குறிப்பிட்ட பல்வேறு வேதவாக்கியங்கள் அவர் மாம்ச சரீரத்தை பெற்றிருந்தார் என்று நிரூபிக்கவில்லை. ஏனெனில் தேவதூதர்கள் மனிதர்களிடையே மாம்ச சரீரத்தில் தோன்றியிருக்கிறார்கள். ஆபிரகாமுக்கு பழங்காலத்தில் தரிசனம் கொடுத்த போது மாம்ச சரீரத்தை எடுத்துக்கொண்டது போல, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த போது மாம்ச சரீரத்தை எடுத்துக்கொண்டு தரிசனமானார். (ஆதியாகமம் 18: 1,2; 15: 4,5) அவரது உயிர்த்தெழுதலுக்கு பிறகு எம்மாவூருக்கு சென்ற இரண்டு சீ-ர்களோடு நடந்து சென்று அவர்களோடு இரவு

போஜனத்திற்காக உட்கார்ந்தார். அவர் அப்பத்தை பிட்ட போது அவர் அவர்களால் அறியப்பட்ட உடனே அவர்கள் கண்களிலிருந்து மறைந்து போனார். (லூக்கா 24: 30,31)

### உருவமான ஒரு சரீரம்

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு தரிசனம் கொடுத்த போது, "சீஷர்கள் கூடியிருந்த இடத்தில் யூதர்களுக்கு பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில்" அந்த அறையிலே இயேசு தோன்றினார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எட்டு நாட்களுக்கு பிறகு அதே அறையில், அதே முறையில் "கதவுகள் பூட்டப்பட்டிருக்கும் போது" மறுபடியும் தரிசனம் கொடுத்தார் என்று நாம் மேலும் வாசிக்கிறோம். (யோவான் 20: 19,20) இவையெல்லாம், அவர் இனி மாம்ச ஜீவியல்ல, ஆவியின் ஜீவி தான் என்பதை சீஷர்களுக்கு காண்பிக்கவே ஆகும். அவரது உயிர்த்தெழுதலுக்கு பிறகு அவர் தரிசனம் கொடுத்தது மொத்தத்தில் மூன்று மணி நேரத்துக்கு மேல் இருக்காது. அவர் அவர்களோடு இருந்தது அவர்களது விசுவாசத்தை நிலை நாட்டுவதற்கும், அதன் மூலம் ஏற்ற காலத்தில் பரிசுத்த ஆவியை பெறக்கூடியவர்களாக இருக்கவும் ஆகும்.

பிலிப்பு, மந்திரியின் பார்வையிலிருந்து மறைந்து எப்படி ஆகோத்தில் காணப்பட்டார் என்ற கேள்விக்கு பதில், தேவன் அவரை அங்கே எடுத்து செல்ல முடிந்தது என்பதே. ஆனால் அவர் ஆவியின் ஜீவியாக ஆக்கப்பட்டார் என்பதற்கு எந்தவித பதிவும் இல்லை. பிலிப்பு ஏற்ற காலத்தில் முதலாம் உயிர்த்தெழுதலில் கர்த்தருடன் சுபாவ மாற்றத்தில் பங்கு பெறுவார் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. "ஒரு நிமி-த்திலே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவார்." "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்காது." (1 கொரிந்தியர்15: 51,50) இயேசு எருசலேமில் அவரது சீஷர்களின் நடுவே தோன்றின போது அவர்கள் பயந்தார்கள். அப்பொழுது அவர், "நான் தான் என்று அறியும்படி என் கைகளையும் என் கால்களையும் தொட்டுப்பாருங்கள். நீங்கள் காண்கிற எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே" என்று கூறினார். (லூக்கா 24:39) அவர்கள் ஆவியின் ஜீவியையோ, ஆவிக்குரிய சரீரத்தையோ அவர்கள் பார்க்கவில்லை என்பதை அவர்கள் மனதில் ஆழமாக பதியச் செய்தார். அவர்கள் ஒரு உருவாக்கப்பட்ட சரீரத்தைத் தான் பார்த்தார்கள். கர்த்தர் எல்லா சமயங்களிலும் ஆவியின் ஜீவியாக இருந்தார். எனினும் அவர் தரிசனம் கொடுக்கும் போது மாம்சத்தையும் எலும்பையும் எடுத்துக் கொண்டார். ஆகையால் நமது ஆண்டவர் மாம்சம் மற்றும் எலும்புகளுடன் மற்றும் ஆடையுடனும் தரிசனமானார்.

### சரீரமும் ஆடையும் சமயத்திற்கேற்றாற் போல உருவாக்கப்பட்டது

எங்கேயிருந்து மாம்சமும் எலும்பும் வந்தன? அதே இடத்திலிருந்து தான் ஆடையும் வந்தன. அறையானது மூடியிருக்கும் போது திடீரென்று தோன்றிய மாம்சம் மற்றும் எலும்புகள் முதலானவை கதவுக்கு வெளியேயிருந்து வரவில்லை. சில நிமிடங்களுக்கு எதிலிருந்து அவைகள் உருவாக்கப்பட்டனவோ அதே மூலகங்களாக மறைந்து போயின. "அவர் அவர்களுக்கு மறைந்து போனார். (கிரேக்கு Ginomai aphantos காணக்கூடாதபடி ஆகுதல்)" (லூக்கா 24:31) அதிக நேரம் காணப்படாமல் மாம்சமும், எலும்பும் மற்றும் ஆடையும் மறைந்து போனாலும் இன்னும் அவர்களோடு கூட இருந்தார் - காணக்கூடாதபடி இருந்தார். அந்த நாற்பது நாளில் அதிகமான நேரம் காணக்கூடாதபடி அவர்களோடு இருந்தார்.

நமது ஆண்டவர் தரிசனமான போது அதற்காக உருவாக்கிக்கொண்டதும் மறைந்து போனதுமான ஆடை, மனித சரீரத்தை உருவாக்கி மறைந்தது போலவே அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட வல்லமையினாலானது. அந்த சரீரம் மகிமையான அவரது ஆவிக்குரிய சரீரமல்ல.அவரது ஆடையும் அவர் அணிந்தவைகள் அல்ல.அவரது தையல் இல்லாத ஆடையும் மற்ற ஆடைகளும் ரோம வீரர்களால் பிரித்துக் கொள்ளப்பட்டன என்பதையும், கல்லறை துணிகள் சுற்றி வைக்கப்பட்டிருந்தன என்பதையும் நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும்; (யோவான் 19: 23, 24, 40; 20: 5-7) ஆகையால் அவர் தரிசனமான போது அணிந்திருந்த ஆடைகளெல்லாம் விசேஷித்த விதமாக சிருஷ்டிக்கபட்டவைகளாக இருந்திருக்க வேண்டும்.

நமது கர்த்தர் மனிதனான போது பரிபூரண மனிதனாக இருந்தார் என்பதும் அவர் தம்மை மீட்கும் பொருளாக ஆதாமுக்காக பலியாக கொடுத்தார் என்பதும் நமது எண்ணமாக இருக்கிறது. "தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்." (எபிரேயர் 2:9; 10: 5) அந்த பூமிக்குரிய மாம்ச மனித சரீரம் மரணத்தை அடைந்தது. தேவன் அவரை மறுபடியும் மாம்சமாக்காமல் அவரை தெய்வீக சுபாவத்தின் ஒரு புது சிருஷ்டியாக மரித்தோரிலிருந்து எழுப்பினார். உயிர்த்தெழுந்த பின்பு நமது கர்த்தர் தமது சீஷர்களிடம் கூறினதாவது : "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருகிறது." (மத்தேயு 28: 18)

நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதலில் பெரும் மாற்றம் அவரிடம் வந்தது என்பதை இவைகளெல்லாம் நமக்கு சுட்டிக்காட்டுகின்றன. இப்பொழுது அவர் வெறும் மனிதனாக இருந்தால் இன்னும் "அவர் தேவதூதரிலும் சிறியவராகவே இருப்பார்." நமது கர்த்தரை ஒரு மனிதனாக மற்றும் தேவதூதரிலும் சற்று சிறியவராக நினைப்பது, அவர் தேவதூதர்களுக்கு மிகவும் மேலாக தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டார் என்கிற நமது கர்த்தரின் வசனத்திற்கு மாறானதாக இருக்கும். "அவர் மனு- ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்." (பிலிப்பியர் 2: 8-11)

---

ஏழாம் சபையின் தூதனாகிய

**சகோ. C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :

**சகோ. R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை

எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.

கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**